Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (4-8-66) இதழ் 175

பராபவ ஆடி 19 ரபி: ஆகி 16 வியாழக்கிழமை

## திரைப்பட டிக்கட் கட்டணம் உயருமா?

கொழும்பு, வியாழன்

வரவு-செலவுத் திட்டத்தில் பிலிம் சுருளுக்கு இறக்குமதித் தீர்வை இரட்டித்திருப்பதை அரசாங்கம் குறைக்காவிடில், படம் பார்ப்பவர்கள் கூடிய பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதுபற்றி திரைப்பட சங்கத்தின் அங்கத்தவரொருவர் தெரிவிக்கையில் இறக்குமதித்தீர்வைகள் அதிகமாக வசூலிக்கப்பட்டபோதும், கடந்த ஐம்பது வருடங்களாக டிக்கட் கட்டணங்கள் மாற்றமின்றியே இருந்து வந்துள்ளன வென்று கூறினர்.

இறக்குமதித்தீர்வை குறைக்கப்பட்டாலும் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகள் காரணமாக செய்திப்படங்களும் சிறிய உபபடங்களும் குறைவாக வ காட்டப்படுமென்று இன்னெரு அங்கத்தவர் கூறினர்.

# பொலிஸ் இலாகாவில் ஊழல் நிலவுகின்றது

## 'ஆமாம்சாமி' போடுவதையே அவர்கள் எதிர்பார்க்கிருர்கள்!

### பொலிஸ் கமிஷன் முன்னிலையில் மேஜர் குணரத்ன சாட்சியம்

கொழும்பு, புதன்

இன்று ஆரம்பமான பொலிஸ் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளித்த முன்னள் தெஹிவளை மேயர் மேஜர் எல். வீ. குணரத்ன பொலிஸ் பகுதியினர் பற்றி பாரதூரமான கருத்துக்களைத் தெரிவித்தார்.

'இலங்கைப் பொலிசார் மிருகத்தனமாக நடக்கின்றனர், ஊழலும் தகுதியின்மையும் மலிந்துகடக்கின்றன' என்று மேஜர் குணரத்ன தெரிவித்தார்.

முன்னள் பிரதம நீதியரசரான எச் ஹேமா பஸநாயக தலைமையிலான பொலிஸ் கமிஷன் விசாரணை இன்று ஆரம்பமான போது முன்னுள் தெஹிவளை மேயரான மேஜர் குணரத்ன சாட்சியமளித்தார். இவர் முன்னர் ராணுவத்தில் மேஜர் பதவியிலும் கொழும்பு ரோயல் கல்லூரியில் ஆசிரியராகவும் தொழில் புரிந்திருக்கின்ருர்.

#### தெய்வம் என்று நினைப்பு

சாட்சி கூறியதாவது-

பொலிஸ் படையினர் தம்மைத் தெய்வமென நினைத்துக்கொள்கிருர்கள். அவர்கள் தமக்கு மரியாதையும், வணக்கத்தையும் எதிர்பார்க்கிருர்கள் இதைச் செய்யத் தவறுகிறவர்கள் அவர்களின் கொடுமைக்கு ஆளாகின்ருர்கள். யூனிபோம் அணியும் ஆனகர் 'ஆமாம்சாமி' போடவேண்டுமென்று எதிர்பார்க்கிருர்கள். இப்படியான சம்பவங்கள் பலவற்றை என்னுல் இங்கு கட்டிக்காட்டமுடியும். கடந்த 14 ஆண்டுகளிலும் இடம்பெற்றுள்ள பொலிசாருக்கெதிரானபலசாட்சியங்களை என்னுல் சமர்ப்பிக்கமுடியும்

இந்தக்கட்டத்தில் கமிஷனர் தலையிட்டு சமர்ப்பிக்கப்படும் எல்லா சாட்சியங்களையும் தாம் பரிசீலிக்கப் போவதாகக் கூறி, இந்தச்சம்பவங்கள் பற்றி புகார்கள் ஏதும் செய்யப்படவில்லையா என்றும் கேட்டார்.

#### யாரிடம் புகார் செய்வது?

மேஜர் குணரத்ன பதிலளிக்கையில், யாரிடம் நாங்கள் புகார் செய்வது என்று கேட்டார்

ஐ. ஜி. பி யிடம் புகார் செய்தால் அவர் பொலிஸ் சுப்பிரிண்டனுக்கு பாரப்படுத்துவார். அவரும் கடைசியில் உதவி இன்ஸ்பெக்டருக்கு பொறுப்பைக் கொடுப்பார். பொதுவாக இந்த அதிகாரி சம்பந்தப்பட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

## இளம் பெண் மீது இருதாரக்குற்றச்சாட்டு

### பொத்துஹெர சம்பவத்தில் புதிய திருப்பம்

கொழும்பு, புதன்

பொத்துஹெர பொலிசார் தம்மீது பலாத்காரம் செய்ததாகப் புகார்செய்த எதிரிசிங்கவே கமலாவதி என்ற இளம் பெண், இருதார மணம் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு இன்று காலை கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. பி. ஜி எஸ். டேவிட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்

வெல்லம்பிட்டியைச் சேர்ந்த பி. ஏ. பொடி அப்புகாமி என்பவரை மணம் செய்த கமலாவதி வரக்காபொல என்னுமிடத்தைச் சேர்ந்த எச். பி. கருணரத்தின என்பவரையும் மணம் செய்ததாக இருதாரதடைச் சட்டத்தின்மீது குற்றம் சாட்டிவழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கமலாவதி எதிரிசிங்கவே சார்பில் ஆஜரான சார்ள்ஸ் வேதக்கன், கமலாவதிமீது 'வாரண்ட' பிறப்பிக்கப்பட்டிருந்தது அவருக்குத் தெரியாதென்றும் 'சமன்ஸ்' வழங்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'விசேஷ ரயிலில் வரவேண்டும்'

### பிரதமர் விஜயம்பற்றி காங்கிரஸ் கமிட்டி தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் வரவிருக்கும் பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவும் மற்றும் மந்திரிகளையும் விசேஷ ரயில் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டுமெனக் கோரும் தீர்மானம் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக காங்கிரஸ் காரியதரிசிகளுள் ஒருவரான திரு நா இராசநாயகம் தெரிவித்தார்

பலாலி விமானநிலையத்தில்இறங்கியபின்னர் ஹெலிகாப்டர் மூலம் யாழ்ப்பாணம் வருவதாக இருந்தால் வரவேற்பு ஏற்பாடுகளைச் சிராகச் செய்யமுடியாதநிலை ஏற்படுமெனறும் யாழ்ப்பாணத்துக்கு சேஷ ரயில் மூலம் வருவதாக இருந்தால் வரவேற்பு ஏற்பாடுகள் வசதியாகக் கவனிக்கக்கூடியதாக இருக்குமெனவும் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டதாகவும் திரு ராசநாயகம் கூறினர்

திருவாளர்கள் ரி சங்கரப்பிள்ளை, சி அருளம்பலம், ஆர் விஸ்வநாதன், ஏ தனபாலசிங்கம் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்

வருமானவரி வழக்கு

## 'சொத்தை எல்லாம் விற்ருலும் அந்தத்தொகை வராது'

### மாஜி உணவுக் கமிஷனர் சாட்சியம்

கொழும்பு, புதன்

வருமானவரிசம்பந்தமாக பொய் தகவல் கொடுத்ததாக முன்னுள் உணவுக் கமிஷனர் திரு. கே. எம், பி. ஜயனெட்டி மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கு இன்று மீண்டும் கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதுதிரு. ஜயனெட்டி சாட்சியமளித்தார்.

அவர் கூறியதாவது:

நான் 1947-ல் உணவுக் கமிஷனராக இருந்தேன். 1960-ல் தேசிய வீடமைப்பு பகுதியில் கமிஷனராக விருந்தேன். நான் முதல் பிரிவு முதல் வகுப்பு சிவில் சேவகராக இருந்தேன். எனது அடுத்த உத்தியோக உயர்வு நிரந்தரக் காரியதரிசிப் பதவியாக இருந்திருக்கும். 1963-ம் ஆண்டில் நான் எனது மனைவி, பிள்ளைகளுடன் வெளிநாடுகளுக்கு லீவில் சென்றேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

## தபாற்கந்தோர் விடுமுறை

கொழும்பு, வியாழன்

இன்று வியாழக்கிழமை தபாற்கந்தோர்களுக்கு அரை நாள் விடுமுறையாகும். சகல தபாற்கந்தோர்களிலும் இன்று அலுவல்கள் போயா முதல் நாள் போல நடைபெறும்

## கூ. மொ. வி. ஸ்தாபனம் ஒருபோதும் வெற்றி தராதாம்

### மத்திய வங்கி கவர்னர் கருத்து

கொழும்பு, புதன்

கூட்டுறவுமொத்த விற்பனவு இலாகா சம்பந்தமான ஊழல்கள் பற்றிய விசாரணைக் கமிஷன் முன் இன்று மத்தியவங்கியின் கவர்னர் திரு. லோகநாதன் சாட்சியமளிக்கையில் கூட்டுறவுமொத்த ஸ்தாபனம் ஒருபோதும் வெற்றியளிக்கும் ஸ்தாபனமாக விளங்க முடியாதுஎன்ருர்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் நம் நாட்டின் வளங்களை நாசமாக்கும். நம் நாடுபோன்ற ஜனநாயக நாடுகளில் அரசாங்கம் நடத்தும் கூட்டுத்தாபனங்களில் ஒழுங்கை நிலைநாட்டுவது இயலாது எனவே எந்த ஸ்தாபனமும் கூட்டுப்பங்கு முறையில் பொதுமக்களினுல் நடத்தப்பட்டால்தான் நன்மையளிக்கும் என்று திரு லோகநாதன் கூறினர்.

## ஸ்ரீமாவோ நாடு திரும்பினர்

கொழும்பு, வியா.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதிஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்றிரவு 8-20 மணியளவில் விமான மூலம் இலங்கை வந்துசேர்ந்தார்.

இரத்மலானை விமானநிலயத்தில் அவரை வரவேற்பதற்காக எதிர்க்கட்சித்தலைவர்கள், அங்கத்தவர்கள், கிழக்கு, ஐரோப்பிய நாடுகளின் தூதர்கள் மற்றும் பிரமுகர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமானவர்கள் திரண்டிருந்தனர்

பலர் அவருக்கு மலர்மாலை அணிவித்தனர். விமானநிலையத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட மோட்டார் காரில் ஊர்வலமாக அவரது இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார் வழியில் நீல, சிகப்பு நிறக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன

ஸ்ரீமதி பண்டாரநாயகா பெல்கிரேடில் ஜூன் 4-ல் நடைபெற்ற சோசலிஸ்ட் கட்சிகள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்றிருந்தார்; அங்கிருந்து ஐக்கியஅரபுக்குடியரசிற்குச் சென்று பின்னர் யூகோஸ்லேவியாவுக்கு சென்றிருந்தார்

## 50 வீதம் ஆஸ்பத்திரிகளுக்கு

கொழும்பு, புதன்

தேசிய லொத்தர் சபைக்குச் சேரும் மொத்தத் தொகையில் ஐம்பது வீதத்தை நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளின் அபிவிருத்திக்காக ஒதுக்குவதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### கல்வி

மாலை வகுப்புகள்:
கல்லூரி மாணவர்களின் வசதிக்காக, ஜீ. ஸி. ஈ. உயர்தரம், கலை/விஞ்ஞானம், பொதுக்கலை தராதரம், ஜீ. ஸி. ஈ. பிரப் (Prep) விஞ்ஞானம், கனிஷ்ட தராதரம் முதலிய மாலை வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. ஐக்கிய கலாசாலை, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 814

வகுப்புகள்:
மாணவ ஆசிரியர், பொது சுகாதாரம் பயில்வோர் (Public Health Learners) மொழிபெயர்ப்பாளர் சேவை, முதலிய பரீட்சைகளுக்கான வகுப்புகள் தற்போது நடாத்தப் படுகின்றன. தாமதமின்றி சேர்ந்து கொள்ளுங்கள். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி கரவெட்டி / 107 பருத்தித்துறைவீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 815

வகுப்புகள்
அரசாங்க நிர்வாக லிகிதர்களுக்கான 2-ம் தர உயர்வுப் பரீட்சை, கணக்காளர் சேவை 4-ம் தரம், நிர்வாக சேவை 5-ம் தரம் ஆகிய உயர்வுப் பரீட்சைகளில் சித்தி பெற விரும்பும் அரசாங்க சேவை ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகுப்புகள் பின்வரும் நிலையத்தில் நடத்தப்பட்டு வருகின்றன: ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 816

### WANTED

Sales Representatives
Wanted Sales Representatives Chemistry added qualification send self addressed stamped envelop for details.
Murugan Agency & Industries, 72/2, Kandarmadam, Jaffna. 819

### விற்பனைக்கு

மில் விற்பனைக்கு
அரிசி - மா - தூள் - சிறிய நெல் கிறைண்டர்களுடன் டீசெல் என்ஜின் இணைவுற்ற மில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: உரிமையாளர், கலாபவனம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 804

### வைத்தியம்

நொய்வு, கசம், நீரிழிவு, நீரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

மகாத்மா தியேட்டர்
(கரவெட்டி)
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
முதலியோர் நடித்த
"பூமாலை"

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ் எஸ். ஆர். - தேவிகா
நடித்த
முதலாளி

REGAL—JAFFNA
at 4-30 p.m. Only
GREGORY PECK
TONY CURTIS
in
Captain New Man M.D.
(Eastman Color)
மாலை 6-30க்கும்
இரவு 9-30க்கும்
திருவிளையாடல்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
SAMMY
GOING SOUTH
(Eastman Colour)

5-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (அம்பாறை) ராஜ் (நீர்கொழும்பு)
ஸ்ரீ கிருஷ்ணா
(திருமலை)



ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
"வெண்ணிற ஆடை"

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை


# ஆபிரிக்கர்கள் பிரயாணம்செய்த ரயில்கள் மோதுண்டன

## ஆத்திரம் கொண்டகும்பல் ரயில் சாரதிகளைத் தாக்கியது

ஜோகன்னர்ஸ்பேர்க், ஆக.3
ஏராளமான ஆபிரிக்கர்களை ஏற்றிக்கொண்டு சென்ற இரண்டு பிரயாணிகள் ரயில்கள் ஜோகன்னர்ஸ்பேர்க் அருகே மோதிக்கொண்டதில் ஐவர் மாண்டனர். ரயில்கள் மோதிக்கொண்டதும் ஆத்திரம் கொண்ட ஆபிரிக்கர்கள் அந்த இரண்டு ரயில்களினது சாரதிகளையும் அடித்துக் காயப்படுத்தி ரயில் பெட்டிகளுக்குத் தீ வைத்தனர். இரண்டு ரயில் சாரதிகளும் வெள்ளையர்களாகும்.

ரயில் விபத்தில் 248 பேர் காயமடைந்தனர்.

இரண்டு சாரதிகளில் ஒருவர் மாண்டதாக முன்னர் தகவல் கிடைத்தபோழுதிலும் அவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் இருப்பதாக பின்னர் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களில் 200 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். (பி டி. ஸி)

## புதிய வழக்கறிஞர்



யாழ்ப்பாணம், வியா
பாரிஸ்டர் திரு. சே. கனகேஸ்வரன் (எல் எல். பி. லண்டன்) சென்ற 28ந் தேதி சுப்ரீம்கோர்ட் அத்துவக்காத்தாக நீதியசரர் திரு டி. எஸ். பெர்ணாண்டோ நீதியரசர் திரு. அலெஸ் ஆகியோர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

திரு. கனகேஸ்வரனைப் பாராட்டிப் பேசிய நீதியரசர் பெர்ணாண்டோ, திரு. கனகேஸ்வரனை அத்துவக்காத்தாகச் சேர்த்துக்கொள்வதில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும், வழக்கறிஞராகக் கடமையாற்றிய தமது பழைய நண்பர் ஒருவரின் புதல்வன் இவ்விது பதவியை ஏற்பதில் தாம் மேலும் மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்தார். தந்தையைப் போல் அவருக்கும் நல்ல ஒரு ஸ்தானம் கிடைக்குமெனத் தாம் நம்புவதாகவும் நீதியரசர் மேலும் குறிப்பிட்டார்.

திரு. கனகேஸ்வரன், திரு திருமதி எஸ். ஆர். கனகநாயகத்தின் புதல்வராவார்.

## 'சேவையில் பெருஞ்சேவை'

யாழ்ப்பாணம், வியா.
"ஏழைகளுக்குச் சேவை செய்வதே எல்லாவற்றிலும் பெருஞ் சேவையாகக் கொள்ளவேண்டும்" என்று திரு. ஜெகராசசிங்கம் சுண்டிக்குழி அறிவியல் மன்றத்தாரின் இரவுப் பாடசாலையைத் திறந்துவைத்துப்பேசுகையில் கூறினார். திரு. ஜயா ஜோசப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அதிபர் திரு [illegible] ... தினர்.

## சித்த ஆயுள் வேத வைத்திய சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்
அகில இலங்கை சித்த ஆயுள்வேத வைத்தியர் சங்கத்தின் 36-வது வருடாந்தக் கூட்ட இம்மாதம் 14-ந் திகதி நடைபெறும்.

யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேத வைத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு வைத்தியர் திரு. ஏ. கே. குமாரசாமி தலைமை வகிப்பார்.

வட்டுக்கோட்டை

## தமிழ்க்காங்கிரஸ்கிளை அங்குரார்ப்பணம்

வட்டுக்கோட்டை, செவ்.
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், வட்டுக்கோட்டைக் கிளையின் அங்குரார்ப்பணக்கூட்டம் சித்தங்கேணியில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எம் கே சுப்பிரமணியம், உபதலைவர்கள்: முதலியார் பி எம் சங்கரப்பிள்ளை, திரு வே வி மூர்த்தி, இணைக்காரியதரிசிகள்: திரு மூ தாமோதரம்பிள்ளை, திரு ஏ வீரவாகு, தனாதிகாரி: திரு எஸ் துரைராசா, உபதனாதிகாரி: திரு எம் தங்கவேலு.

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பல்வேறு வட்டாரங்களின் பிரதிநிதிகள் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மெய்யடியார் வழியில் சென்றால்...

யாழ்ப்பாணம், வியா
யாழ்ப்பாணத்தில் களவு, கொலை முதலாம் பாவச் செயல்கள் வரவர அதிகரித்து வருகின்றன. இதற்குக் காரணம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலாம் அருள்சேர் மெய்யடியார்கள் வழியிலே நாடு ஒழுகுவதில் அதிக ஆர்வம் காட்டாமையே.

இவ்வாறு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் நடைபெற்ற சுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசையில் தலைமைவகித்துப் பேசுகையில் முதலியார் செ. முத்துத்தம்பி கூறினார்.

பண்டிதர் செ. சிவப்பிரகாசம், திரு. க. சிவராமலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## "தொண்டுகள் பல புரிந்தவர்"

யாழ்ப்பாணம், வியா
இந்நாட்டில் தோன்றிய ஒப்பற்ற மாந்தருள் ஒருவர் சிவபாதசுந்தரமவர்கள். மனிதர்களை உண்டாக்கிய மகாபுருஷர். கல்லூரி அதிபராக அவர் விளங்கி நம் நாட்டு மக்களின் எதிர்கால வாழ்வு வளம்பெற அளப்பரிய தொண்டுபுரிந்தவர் என சைவபரிபாலன சபை ஆதரவில் நடைபெற்ற சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் நினைவு விழாவில் தலைமைதாங்கிப் பேசும்போது இந்துக்கல்லூரி அதிபர் திரு. ந சபாரத்தினம் குறிப்பிட்டார்.

பண்டிதர் செ. சிவப்பிரகாசம், திரு. சோ. கணேசரத்தினம், திரு. மு மகிவாகனம் ஆகியோரும் பேசினர்.


## விளம்பரம்

### இலங்கை அரசினர் பயிர்ச்செய்கை சமாஜம்

முருங்கன் பகுதியிலுள்ள சிலவாத்துறையில் காடு வெட்டக் கொன்ருக்ரர் உடனே தேவை. விரும்பமானவர்கள் 25, 50 அல்லது 100 ஏக்கர் செய்ய எவ்வளவு வேண்டுமென்பதை குறித்து விண்ணப்பிக்கவும். மாரி தொடங்குமுன் வெட்டி முடிய வேண்டும்.
தலைவர்.
106, Havelock Road,
Colombo-5. 908

### மண்ணியாகுளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு பரிபாலன காரியதரிசி தேவை

மேற்படி சங்கத்துக்கு ஓர் பரிபாலன காரியதரிசி தேவை. விண்ணப்பங்கள் தலைவர், மண்ணியாகுளம், ப. நோ. கூ. சங்கம், வேல்ஸ் றேடியோ, கிளிநொச்சி என்ற விலாசத்துக்கு 13-8-66க்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.

தகமைகள்
தமிழ் எஸ். எஸ். ஸி. சித்தியெய்தியவராகவும் (ஆங்கிலம் அறிவுடையவர் விரும்பத்தக்கது)
கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரம் சித்தியெய்தியவராக இருக்க வேண்டும்.
வயது: 22 தொடக்கம் 35 வரையும்.
பிணை: 1. ரொக்கம் ரூபா 1000/-.
2. ஆதனம்: ரூபா 2000/-
சம்பளம்: மாதம் ரூபா 120/- (எல்லாப் படிகளும் உட்பட).
வே. பெ. பொன்னம்பலம்,
904 தலைவர்.


## பரிசளிப்பு விழா

கொழும்பு, புதன்
தெமட்டக்கொடை அரசினர் தமிழ் வித்தியாலய பரிசளிப்புவிழா பொரளை புத்த இளைஞர் மன்றமண்டபத்தில் இம்மாதம் 8-ம் திகதி திங்கட்கிழமை மாலை நடைபெறும். கல்வி, கலாச்சார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கலாநிதி ஏ. டபிள்யூ. பி. ஆனந்தகுருகே தலைமை வகிப்பார். தொழில் வீடமைப்புமந்திரி திரு. எம். எச். முகமது பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

## நெசவுபயிற்சிப்பாடசாலைகள்

வல்வெட்டித்துறை, புதன்
பருத்தித்துறை காரியாதிகாரி பிரிவைச்சேர்ந்தநாகர்கோவில், கற்கோவளம், குடத்தனைக்கரையூர், நெல்லண்டை, ஆகிய இடங்களில் புதிய நெசவுப்பயிற்சிப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இப்பாடசாலை ஒவ்வொன்றிலும் 25 மாணவர்கள் பயிற்சி பெறத்தக்கதாக போதிய தளபாடங்களும், ஒவ்வொரு ஆசிரியர்களையும், தலா 6000 ரூபாவும் அரசாங்கம் வழங்கவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குப் பாகிஸ்தானில் கடும் பூமியதிர்ச்சி!

## 45 கிராமங்கள் பாதிக்கப்பட்டன 5000 குடும்பங்கள் வீடிழந்தன

### குபெட்டா பிரதேசத்தில் அதிகசேதம்

கராச்சி, ஆக.3

மேற்குப் பாகிஸ்தானில் கராச்சிக்கு வடக்கே முந்நூறுமைல் தூரத்தில் நேற்று ஏற்பட்ட பூகம்பத்தினால் இருபத்திமூவாயிரம் சதுரமைல் பரப்பிலுள்ள சுமார் நாற்பத்தைந்து கிராமங்கள் பாதிக்கப்பட்டன. அடுத்தடுத்து சிலமணிநேரத்திற்குள் மூன்று தடவைகள் நிகழ்ந்த இப்பூமி அதிர்ச்சியினால் சுமார் ஐயாயிரம் குடும்பங்கள் வீடிழந்தன என்றும் இரண்டு கிராமங்கள் முற்ருக நாசமடைந்துவிட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பூமியதிர்ச்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது குபெட்டா பிரதேசமாகும். இங்கு சேதமடையாத வீடு எதுவுமே இல்லை என்று அறிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட வீடுகளில் 95 சதவிகிதவீடுகள் நாசமடைந்திருக்கின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**உயிர்ச்சேதம் குறைவு**

பூமியதிர்ச்சி கடுமையாக இருந்தபோதிலும் உயிர்ச்சேதம் மிகவும் குறைவு என்று அறிவிக்கப்பட்டது. கடுமையான வெப்பம் காரணமாக இப்பகுதி மக்கள் வீடுகளைவிட்டு வெளியே இருந்ததால் உயர்ச்சேதம் பெருமளவில் ஏற்படவில்லையென்றும் இருவர் மட்டுமே பலியானூர்களென்றும் பலர் காயமடைந்தனரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்தியசிகிச்சை அளிப்பதற்காக டாக்டர்கள் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர். நிவாரண வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

ஆப்கானிஸ்தானுக்கு அருகில் உள்ள எல்லைப் பட்டினமான குபெட்டில் 1935ல் ஏற்பட்ட ஒரு பூமிஅதிர்ச்சியின் விளைவாக 30,000 பேர் கொல்லப்பட்டனர்.

## ஹைபாங் நகரில் மீண்டும் தாக்குதல்கள்

### கட்டுப்பாட்டு கமிஷனிடம் வடக்கு வியட்னும் புகார்

ஹனேய், ஆகஸ்ட் 3

ஹைபாங் நகரில், குடியிருப்பு பகுதிகளில் அமெரிக்கா குண்டுவீசித் தாக்குவதாக சர்வதேச கட்டுப்பாட்டு கமிஷனிடம் வடக்கு வியட்னும் தாக்கல் செய்திருந்த புகாரை அமெரிக்கா மறுத்துள்ளது.

ஹைபாங் நகரில் மக்கள் நெரிசலாக வாழும்பகுதிகளில் அமெரிக்க விமானங்கள் நேற்று மூன்ருவது தடவையாக குண்டுவீசித் தாக்கினஎன்றும், 1954-ம் ஆண்டு ஜெனிவா ஒப்பந்தத்தை அமெரிக்கா அப்பட்டமாக மீறியிருக்கிறதென்றும் வடக்கு வியட்னும் கட்டுப்பாட்டுக்கமிஷனிடம் முறையிட்டிருந்தது.

ஆனல் இதனை அமெரிக்கா மறுத்திருக்கிறது.

ஹைபாங் நகருக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள எண்ணெய்க் குதங்கள்மீதும் சில இலக்குகள்மீதுமே தாக்குதல்கள் நடைபெற்றன என்றும் குடியிருப்புப் பகுதிகள் மீது விமானங்கள் தாக்குதல் நடத்தவில்லைஎன்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதற்கிடையே தென் வியட்னுமில் மத்திய பிரதேசத்தில் நேற்று வியட்காங்கியுடன் அமெரிக்க படைகள் நான்குதடவைகள்மோதின.

## முன்னுள் பிரதமர் உட்பட 6 அரசியல் கைதிகள் விடுதலை

### நைஜீரிய இராணுவ அரசாங்கம் நடவடிக்கை

லேகாஸ், ஆகஸ்ட் 3

அரசாங்கங்களைக் கவிழ்க்கச் சதிசெய்த குற்றத்துக்காக பலவருடகாலம்வரை சிறையில் வைக்கப்பட்டிருந்த ஆறு அரசியல்கைதிகளை நைஜீரிய புதிய இராணுவ அரசாங்கம் விடுதலை செய்துள்ளது.

முன்னுள் மேற்கு நைஜீரிய பிரதமர் அவலோவோவும் மற்றுமொரு மந்திரியும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் முந்திய அரசாங்கத்தைக்கவிழ்க்கச்சதித்திட்டம் வகுத்திருந்ததாக குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது. இவர்கள் பலவருடங்களாக சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

இதற்கிடையே நைஜீரியாவில் பயங்கரஅமைதிநிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. செய்தித்தணிக்கை இங்கு கடுமையாக இருக்கிறது.

முன்னுள் பிரதமர் மேஜர் ஜெனரல் இரான்ஸியின் நிலைமை குறித்து தகவல் எதுவும் இல்லை.

## ரஷ்யப் பிரதமராக கோஸிஜின் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு

### மாறுதல்கள் எதுவும் இடம் பெறவில்லை

மாஸ்கோ, ஆகஸ்ட் 3

சோவியத் யூனியனின் புதிய பிரதமராக திரு. அலெக்ஸி கோஸிஜின் (62வயது) மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சோவியத் பாராளுமன்றமான சுப்ரீம் சோவியத் நேற்று கூட்டப்பட்டு புதிய பிரதமர் தெரிவு நடைபெற்ற பொழுது கட்சித்தலைவர் திரு பிரஸ்னேவ், திரு. கோஸிஜின் பெயரை பிரேரித்தார் இதனை தொடர்ந்து பலத்தகரகோஷத்துக்கிடையே அவர் ஏகமனதாகப் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டர் இக் கூட்டத்தில் 1,500 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சோவியத் உயர் அதிகார பீடத்தில் பல மாற்றங்கள் நிகழலாமென்றும் பிரதமர் திரு. கோஸிஜின் ராஜினமா செய்யலாமென்றும் பலத்த வதந்திகள் உலவிய போதிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை புதிய அமைச்சர் ஒருவர் கோஸிஜின் மந்திரி சபையில் இடம் பெறலாமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. அலெக்ஸி கோஸிஜின் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

## தமிழ்நாடு அரசாங்கம் மீது நம்பிக்கையில்லை பிரேரணை

சென்னை, ஆக. 3

தமிழ்நாட்டு அரசாங்கம் மீது அவநம்பிக்கை தெரிவித்துத் திராவிடமுன்னேற்றக் கழகம் கொண்டுவந்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று ராஜ்ய சட்டசபையில் விவாதம் ஆரம்பமானது விவாதம் மூன்று நாள் நடைபெறும்.

## பழங்குடியினரைக் கொலைசெய்கின்றனராம்

லேகோஸ், ஆக. 3

நைஜீரியாவின் வடக்குப் பகுதியல் பழங்குடி மக்களை கலகத் துருப்புகள் கொலை செய்துவருவதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

## வில்ஸனுக்கு ஜோன்ஸன் பாராட்டு

லண்டன், ஆக. 3

வாஷிங்டனில் ஜனதிபதி ஜோன்ஸனுடன் ஒருநாள் பேச்சுவார்த்தைகளை நடாத்திவிட்டு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் வில்ஸன் லண்டன் வந்துசேர்ந்தார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற விருந்துபசாரத்தின்போது ஜனதிபதி ஜோன்ஸன் பேசுகையில் உலக சமாதானத்துக்கும், அமைதிக்கும் பிரிட்டனும், அமெரிக்காவும் ஒன்றுபட்டு உழைத்து வருவதாகவும், தொடர்ந்தும் இத்தச் சமாதான முயற்சி மேற்கொள்ளப்படுமெனவும் குறிப்பிட்டார்.

பிரிட்டன் தனது பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பற்றிப் பிரஸ்தாபித்த அவர், திரு வில்சனை சேர் வின்ஸன் சேர்ச்சிலுடன் ஒப்பிட்டுப் பாராட்டினர்.

## போதிய பிணங்கள் கிடைக்கவில்லையே!

டோக்கியோ, ஆக 3

சத்திர சிகிச்சைப் பயிற்சி செய்வதற்குப் போதியளவு பிணங்கள் கிடைக்காமல் ஜப்பானிலுள்ள மருத்துவ மாணவர்கள் கஷ்டப்படுகின்றனர்.

சில பிணங்கள் மருத்துவக் கல்லூரிகளுக்கு நன்கொடை செய்யப்படுகின்றன. மற்றும்படி தெருவில் இறந்துகிடக்கும் அடையாளம் கண்டுபிடிக்கமுடியாதவர்களின் பிணங்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

மாணவர்கள் தமது படிப்பைப் பூர்த்திசெய்வதற்கு ஒரு பிணமாவது இரு மாணவர்களுக்குத் தேவைப்படுகிறது.

சென்ற வருடம் டோக்கியோவிலுள்ள மிகப் பெரிய மருத்துவக்கல்லூரியில் 160 மாணவர்களிடையே ஆக 40 பிணங்கள் தான் இருந்தனவாம்.

(பி. டி. ஸி)

## குடியேற்ற விவகார காரியாலயம் மூடப்பட்டது

லண்டன், ஆக. 3

பிரிட்டிஷ் குடியேற்ற விவகாரக் காரியாலயம் உத்தியோகபூர்வமான முறையில் மூடப்பட்டது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் காமன்வெல்த் உறவு இலாகாவுடன் இக்காரியாலயம் இணைக்கப்படும். இப்புதிய அமைப்பு ஆகஸ்ட் முதலாந் தேதியுடன் காமன்வெல்த் காரியாலயம் என்ற பெயருடன் இயங்கிவரும்.

## பிருக்கில் காமராஜர்

பிருக், ஆக 3

இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு. கு. காமராஜர் நேற்று இங்கு வந்துசேர்ந்தார். இவர் செக்கோசிலோவேக்கியாவில் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார்

நேற்றுப் பிற்பகல் திரு. காமராஜர் செக்கோஸ்லவேக்கியத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

## பிரெஞ்சு மக்கள் விருப்பம்

பாரிஸ், ஆக. 3

பிரான்சு தனது சொந்த அணுசக்தியை வைத்திருக்க வேண்டுமென்று முன் எப்பொழுதும் பார்க்க இப்பொழுது பிரெஞ்சு மக்கள் விரும்புவதாகத் தெரிகிறது.

கடந்த ஏப்ரலில் பொதுமக்கள் அபிப்பிராயச் சங்கம் நாடு முழுவதும் நடாத்திய வாக்கெடுப்பின் படி 46 சத வீதம் அணுசக்தி வேண்டுமென்றும், 42 சத வீதம் அதை மறுத்தும், 12 சத வீதம் எந்தப் பக்கமும் சாராமலும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

(பி. டி. ஸி)

காமன்வெல்த் உறவுமந்திரி இனி காமன்வெல்த் [illegible]

## 31 பேருடன் கப்பல் தவறியது

பால்மவுத், ஆக. 3

தென்மேற்கு இங்கிலாந்தின் பாறைகள் நிறைந்த கரைப் பகுதியிலிருந்து காணமற் போன உல்லாசப் பிரயாணிகள் கப்பலொன்றைத் தேடுவதில் கப்பல்கள், விமானங்கள், ஹெலிகோப்டர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன இக் கப்பலில் 31 உல்லாசப் பிரயாணிகள் இருந்தனர்.

கரையில் கப்பலின் சிதைந்த பகுதிகள் ஏதாவது வந்து சேர்ந்துள்ளனவா என்பதைக் கண்காணிப்பதில் சிலர் ஈடுபட்டுள்ளனர். கப்பலில் சென்றவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்பதில் நம்பிக்கை தெரிவிக்கப்படவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இக்கப்பல் காணமற் போயிற்று. (பி.டி.ஸி)

## அயூப்கான் போக மாட்டார்

கராச்சி, ஆக. 3

அடுத்த மாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டுக்குப் பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் செல்ல மாட்டாரென்றும், பதிலாக மத்திய மந்திரி சபை அமைச்சர் ஒருவர் போவாரெனவும் பாகிஸ்தான் பத்திரிகைகள் கூறியுள்ளன. (பி. டி. ஸி)

## தென் கிழக்கு ஆசிய சங்கம்

பாங்கொக், ஆக. 3

தென் கிழக்கு ஆசியாச் சங்கத்தின் கதவுகள் எல்லாத் தென் கிழக்காசிய நாடுகளுக்கும் திறந்துகிடக்கின்றன என மலேசிய உதவிப் பிரதமர் துன் அப்துல் ரசாக் இங்கு தெரிவித்தார்.

மலேசியா, பிலிப்பைன்ஸ் அல்லது தாய்லாந்துக்கு உத்தியோக பூர்வமாகவோ அல்லது வேறெந்த வழியிலோ தொடர்பு கொள்வதன் மூலம் புதிய அங்கத்தவர்களைச் சங்கம் வரவேற்குமென அவர் மேலும் தெரிவித்தார். (பி. டி. ஸி)

## ரஷ்யாவுக்கு தாய்லாந்து வேண்டுகோள்

பாங்கொக், ஆக. 3

ஹனேய்க்கு உதவி அளிப்பதை நிறுத்தி, சமாதான மகாநாடொன்றை அமைப்பதன் மூலம் வியட்னும் போருக்கு ஓர் முடிவு காணும்படி தாய்லாந்து சோவியத் ரஷ்யாவைக் கேட்டுள்ளது.

இந்தோ - சீன யுத்தத்தை நிறுத்திய 1954-ம் ஆண்டு ஜெனீவா மகாநாட்டில் பிரிட்டனுடன ரஷ்யாவும் இணை அக்கிராசனர் என்ற ரீதியில் இது ரஷ்யாவின் கடமையாகுமென தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் இங்குள்ள ரஷ்ய தூதுவரிடம் கூறியுள்ளார்.

(பி. டி. ஸி)

## பாரசீக மன்னர்

டெஹ்ரான், ஆக. 3

பாரசீக அரசரும் அரசியும் ஏழுநாள் விஜயத்தில் செப்டம்பர் 1ம் திகதி டிகேரியாவுக்குச் செல்வார்களென்று அரண்மனை அறிவிப்பொன்று இங்கு தெரிவித்துள்ளது. (பி.டி.ஸி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தெய்வம் உங்களுக்குள்ளாகக் கோவில் கொண்டிருப்பதால் நீங்களெல்லாம் தெய்வீகமானவர்கள். உங்களுக்கு உள்ளும் புறமு முள்ள தெய்வத்தை மறவாமல், அவர் துணையுடனே காரியம் செய்வதே பேரானந்தமடையவழி.

—சுமாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி மீ 19 உ (4-8-66)


## பிரதமருக்கு வரவேற்பு

பன்னிரண்டு வருடங்களின்பின், இந்த நாட்டின் பிரதம மந்திரி, இந்த நாட்டின் ஒரு பகுதியான யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார். சீர்குலைந்திருந்த தேசிய ஐக்கியத்தை மீண்டும் உருவாக்கிய சிற்பி என்ற முறையில் தேசிய அரசாங்கத்தின் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவை அகமகிழ்ந்து வரவேற்க யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பொது மக்கள் ஆவலோடு ஆயத்தம் செய்கின்றனர்.

பிரதமரின் யாழ்ப்பாண விஜயம், சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது. தேசியத் தலைவர் இந்த நாட்டின் பிரதமர் என்ற முறையில் அவருக்கு மகத்தான வரவேற்பளிக்க வேண்டும். அதன் மூலம், யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் தங்கள் நல்லெண்ணத்தையும், நட்புறவையும், தேசிய ஐக்கியத்தைப் பேணுவதில் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் காட்டவேண்டும்.

பிரதமரை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யுமாறு மாநகரசபை அழைத்திருந்தது. இந்த அழைப்பை அவரும் ஏற்றிருந்தார். துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணம் மாநகரசபை திடீரெனக் கலைக்கப்பட்டு விட்டது. பிரதமர் வருவாரா, வரமாட்டாரா என்ற கேள்வி எழுந்தது. மாநகரசபை கலைக்கப்பட்டு விட்டாலும் யாழ்ப்பாணப் பகுதி மக்கள் பிரதிநிதிகள், வேறு எந்தக் காரணத்தை வைத்தாவது, பிரதமரை இங்கு அழைக்க வேண்டுமென நாம் இப்பகுதியில் யோசனை தெரிவித்திருந்தோம். பிரதமரும் பல அமைச்சர்களும் இப்பொழுது இங்கு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். பிரதமரை வரவேற்பதற்கு பொது மக்கள் போட்டி போட்டுக்கொண்டு ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

இச் சமயத்தில் தான் பிரதமரை யார் முதலில் வரவேற்பது? பிரதமரை அழைத்தவர்கள் மட்டும் தான் வரவேற்பதா?- என்பன போன்ற கேள்விகளும், குறுகிய வாதப் பிரதிவாதங்களும் அரசியல் வாதிகளிடமிருந்து கிளம்பியுள்ளன.

தேசிய ஐக்கியத்தில் தமிழ் மக்களுக்குள்ள நம்பிக்கையையும் பெரும்பான்மைச் சமூகத்தவருடன் நட்புறவு கொள்வதில் தமிழ் மக்களுக்குள்ள ஆர்வத்தையும் காட்டுவதற்கு பிரதமரின் வருகை நல்ல சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. இச்சமயத்தில் தமிழ் மக்கள், வரவேற்பளிப்பதில் கூட கட்சி அரசியல் காரணமாக பிளவுபட்டு நின்றால் அது பிறரின் நகைப்புக்கிடமளிப்பதாகும். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதற்கு தமிழ்த் தலைவர்கள் ஒன்று சேர்ந்து, தமிழ் மக்களோடு பிரதமருக்கு ஐக்கியமான, உற்சாகமான வரவேற்பளிக்க வேண்டும். இதையே பொது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். சிங்கள-தமிழ் ஐக்கியத்தை உருவாக்கி வரும் பிரதமர் முன் தமிழ்த் தலைவர்கள் பிளவுபட்டு நிற்கமாட்டார்களென்றே நம்புவோம்.

## பொலிஸ் அதிபரின் எச்சரிக்கை

பொதுமக்களிடம் பொலிசார் 'முரட்டுத்தனமாக' நடந்துகொள்ளக் கூடாதென்றும் அவ்விதம் நடந்துகொள்பவர்கள்மீது 'கடும் நடவடிக்கை' எடுக்கப்படுமென்றும் பொலிஸ் அதிபர், பொலிஸ் சேவையிலுள்ளவர்களுக்கு விடுத்துள்ள சுற்று நிருபத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சில பொலிசாரின் நடவடிக்கைகள்பற்றிசென்ற சில வருடங்களாகப் பொதுமக்கள் பலர்புகார் தெரிவித்தும் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்படாததனால், "தட்டிக்கேட்க ஆளில்லா விட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்" என்ற நிலை ஏற்பட்டது. திரு. ஜோன் அட்டிகலை பொலிஸ் அதிபராகப் பதவியேற்றபின் எடுத்து வரும் துணிச்சலான காரியங்கள் அந்த நிலையை மாற்றி, பொதுமக்களைப் பாதுகாக்கவேண்டிய பொலிசார் சிலரிடமிருந்தும் தம்மைப் பாதுகாக்க ஒருவர் இருக்கிறார் என்ற தைரியத்தை பொதுமக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளது.

பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியதும், நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியதும் பொலிசாரின் கடமை. சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி நடப்பவர்களையும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரையும் நீதிமன்றத்தின்முன் நிறுத்தித் தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவர்களது பணி. சில பொலிஸ் அதிகாரிகள், தாங்களே தண்டனை அளிக்கலாமெனக் கருதி நடந்து கொள்வதால் தான் பொலிசாருக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்புக்கிடைக்க முடியாது போய்விடுகிறது.

பொலிஸ் அதிபரின் இந்த எச்சரிக்கை பொலிசார் தமது கடமையை உணர்ந்து கொள்ளச் செய்வதுடன் நாட்டில் குற்றச் செயல்கள் ஒழிந்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பொலிசாருக்கு பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்கவும் வழி செய்யுமென நம்புகிறோம்.

# 'இராமநாதவள்ளல் கனவு நனவாக வேண்டும்'

யாழ்ப்பாணம், வியா. "நாவலர் பெருமானின் அடிச்சுவட்டில் சென்று கொண்டிருக்கும் நாம் அவரினதும், சேர் பொன். இராமநாதனினதும் இலட்சியங்கள். எவையோ அவைகளை கட்டிப் பாதுகாப்பது இந்துக்களின் முக்கிய கடமைகளாகும்" என்று முன்னாள் செனட்டர் திரு பி. நாகலிங்கம் கோப்பாயில் நடைபெற்ற இந்து பல்கலைக்கழக ஆலோசனைக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

"இராமநாதவள்ளல் விட்டுச் சென்ற ஆஸ்திகளோடு மழவராயர் போன்ற வள்ளல்களின் தர்மசாசனங்களைக் கொண்டு ஒரு இந்துப் பல்கலைக்கழகம் அமைப்பதே நாம் அவர்களுக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்" என்றும் அவர் மேலும் சொன்னார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:

இராமநாதன் இந்துப் பல்கலைக்கழகம் அரசியல் கட்சி விஷயங்களுக்கு அப்பாற்பட்டது. நாவலர் இராமநாதவள்ளல் ஆகியோரின் கனவு நனவாகவேண்டும். பெரியார்களின் ஆஸ்திகளிலேயே முதலில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல இங்கும் இந்துப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு பின்னர் தன்னிறைவுள்ள ஒரு பல்கலைக்கழகமாக்கலாம்.

மற்றும் பலரும் பேசினர்.

## நாளை கொழும்பில் ம. பொ. சி.

கொழும்பு, வியாழன் தமிழக தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானத்துக்கு நாளை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இலங்கை ம. பொ. சி. மன்றத்தினரால் ஒரு பொது வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

கூட்டத்திற்கு ம. பொ. சி. மன்றத் தலைவர் திரு. எம். பி பாரதி தலைமை தாங்குவார்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், வித்துவான் எப். எக்ஸ். சி. நடராஜா, க. நவசோதி, இ. சங்கர், ஜனாப் ஏ. அசீஸ், கம்பனை தாசன், அன்பர் பூபதிதாசர், லடீஸ் வீரமணி ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

எம். ஜி ஆர். மன்றம், திரு. வி. க. நினைவுப்பள்ளி, கலைவாணர் மன்றம், அருந்ததியர் சங்கம் உட்பட பல மன்றங்களின் பிரதிநிதிகளும் பாராட்டுரை வழங்குவர்.

## அராலிக்கு கிராமசபை
### நலவுரிமைச் சங்கம் பிரசாரம்

அராலி, புதன்

அராலிக் கிராமத்திற்குத் தனியாக ஓர் உள்ளூராட்சி மன்றம். வேண்டுமென்று கோரும் அராலி நலஉரிமைச் சங்கத்தினர் அராலிக்கிராமத்தில் பிரசாரக் கூட்டங்கள் நடத்தி தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர்.

அராலி வடக்கில் திரு. கே. சுப்பிரமணியம் தலைமையில் சமீபத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் அராலிக்கு உள்ளூராட்சிமன்றம் ஒன்று வேண்டுமென்ற கோரிக்கையின் நோக்கத்தை நலவுரிமைச்சங்கச் செயலாளர் விளக்கிக் கூறினார்.

அராலிக்கு ஒரு கிராமசபை நிறுவப்பட்டாலொழிய அராலிக் கிராமம் முன்னேற முடியாதென்று திருவாளர்கள் ச. விஸ்வநாதன், வி. நாகலிங்கம், இ. கந்தமுத்து, மு. சதாசிவம், க. நடராசா, வே. ஐயாத்துரை ஆகியோர் கூறினர்.

திருவாளர்கள் எஸ் தில்லையம்பலம், ஆனந்தம், க. சிறிஸ்கந்தா, தங்கத்துரை ஆகியோரும் பேசினர்.

## உடுவில் புதிய உபமின்சக்தி நிலையம்

உடுவில், புதன்

உடுவில்-கந்தரோடை கந்தையா உபாத்தியாயர் வீதியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் உபமின்சக்தி நிலையம் மிகவிரைவில் இயங்க ஆரம்பிக்கவிருக்கின்றது. இம் மின்சக்தி நிலையத்தின் கம்பி இணைக்கும் தொழில் தற்பொழுது துரிதவேகத்தில் நடைபெற்றுவருகிறது.

இதுவரை காலமும் உடுவில் உபமின்சக்தி நிலையத்தில் இருந்து மின்சக்தி பெற்றுவந்த சுன்னாகம் பட்டினசபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்கள் இந்த உபமின்சார நிலையம் தொழிற்பட ஆரம்பித்தவுடன் உடுவில் பழைய உபமின்சக்தி நிலையத்தின் தொடர்பைத் துண்டித்துக் [illegible]

# ஐயாறன் எழுதுகிறது

அரோகரா! கதிர்காமத்துக்குச் சென்றிருந்தேன். அதனால்தான் இவ்வளவு நாள் தலைகாட்டவில்லை. மன்னிக்கவேண்டும்

காலியிலிருந்து அழைப்பு கிடைத்ததாயும் அங்கு சுந்தரர் குருபூசை நடப்பதாயும் எழுதியிருந்தேனல்லவா? துக்கப்பட்ட மனதுக்கு சற்றே ஆறுதல்கிடைக்கவே அந்த அழைப்பு வந்துள்ளதாகக் கருதி, காலிக்குப் புறப்பட்டுச் சென்றேன்.

கொழும்புக்கு இரவு 10க்குள் போய்ச்சேரவேண்டிய யாழ் தேவி, 1 மணிக்குத்தான் போய்ச் சேர்ந்தது! அச்சமயத்தில் டாக்ஸி டிரைவர்கள் கேட்டது தரவேண்டும். டபிள் மீட்டர் இருப்பினும், மீட்டர் போட முடியாதென்றும் கேட்டது கொடுக்காவிடில் வரமுடியாதென்றும் எல்லா டாக்ஸிகாரர்களும் கட்டுப்பாடாகக் கூறுகின்றார்கள், என்ன செய்வது. இரவு ஒருமணி வரை விழித்திருந்து நம்மை ஏற்றிச் செல்லுகிறார்களே என்று மனதை ஆறுதல் செய்துகொண்டு அவர்கள் கேட்டதைக் கொடுத்துச் சென்றேன், ஏழை டிரைவரின் குடும்பத்துக்கு இறைவன் இப்படி உதவுகின்றார் போலும்!

கொழும்பிலிருந்து காலிக்கு மாலை 4 மணிக்கு ஒரு கடுகதிப்புகையிரதம் (எக்ஸ்பிரஸ் வண்டி) புறப்படுகின்றது. கோட்டை ஸ்டேஷனில் ஏறினேன். உட்கார இடமில்லை. மருதானையிலிருந்து அது புறப்படுவதாகவும், அங்கு சென்று ஏறி இருப்பின் வசதியாக இருந்திருக்குமென்றும் ஓர் அன்பர் பின்னர் சொன்னார். நின்று கொண்டே பாதி தூரத்துக்கு மேல் சென்றேன். என்றாலும் கடற்கரை ஓரமாக அந்த ரயில் பிரயாணம் எவ்வளவு மனோரம்யமாக இருக்கிறது தெரியுமா? எந்த வெளிநாட்டு யாத்திரிகர்களையும் இந்த ரயில் பயணம் மிக வசீகரிக்குமென்பதில் ஐயமில்லை.

தென்னந் தோப்புகளிடையே ரயில்செல்லுகிறது. இடையிலே இரண்டொரு ஸ்டேஷன்களில் ரயில் நின்றது. 'பார்லி பார்லி' என்று ரயிலுக்குள்ளாகவே பலர் புகுந்து குறுக்கும் நெடுக்குமாக நமது தாகத்தைத் தணிக்க கதறுகின்றார்கள்! தென்னை மரங்கள், இனிப்பான இளநீரை குலைகுலையாக வைத்துக்கொண்டு 'குடியுங்கள்' என்று தலையாலே தரக் காத்திருக்கையில் 'பார்லி' படையெடுத்து இளநீருக்கு இடமில்லாமல் செய்துவருவதைக் காண மிக ஏமாற்றமாயும் வருத்தமாயும் இருந்தது.

இளநீரைவிட இந்த 'பார்லி' மேலான பானமா? இயற்கை அன்னை தரும் அந்த அருமைப்பானம் தென்னந்தோப்புகள் நிறைந்த பகுதிகளிலும் நமக்குக் கிடைக்கும்படி செய்ய முடியாதா?

மந்திரி தகநாயகாவின் புண்ணியத்தால். காலி ரயில்வே ஸ்டேஷனை நவீன முறையில் பெரிதாகக் கட்டி வருகின்றார்கள். ஸ்டேஷனிலிருந்து நேர் எதிரே சிவன் கோவில் கோபுர தரிசனம் கிடைத்தது.

நீங்கள் காலி சிவன்கோவிலைப் பார்த்திருக்கிறீர்களோ! அங்கேயுள்ள சிவலிங்கம் மிக விசேஷமானது. பளபளவென்று பொலிகின்றது அவ்வித சிவலிங்கத்தை எங்கும் கண்டதில்லை. நகரத்தார் எனும் நாட்டுக் கோட்டை செட்டிமார்கள்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

அக்கோவிலைக் கட்டிநடத்தி வந்ததாயும், இப்போது, அங்கு குடியேறியுள்ள யாழ்ப்பாண சைவ அன்பர்கள் அதைச்செவ்வனே நடத்தி வருவதாகவும் அறிந்தேன்

பக்கத்திலே கதிர்காம யாத்திரீகர்களுக்குமடத்தில் அன்னதானம் நடக்கிறது. தோட்டப்பகுதியிலிருந்து வந்த பல தொழிலாளர் குடும்பங்களை, அங்கு கண்டேன். பலகாரம், சாப்பாடு, தேநீர் எதுவேண்டுமாயினும் தொண்டர்கள் அன்புடன் அளிக்கின்றனர். தோட்ட வேலைநிறுத்தம் காரணமாக அதிக தொழிலாளர்கள் இம்முறை வரவில்லையாம். என்றாலும் வந்தவர்களுக்கெல்லாம் அன்னதானம் அமோகமாக நடக்கின்றது.

பக்கத்திலுள்ள மாநகர சபைக்கட்டிடத்திலும் யாத்திரீகர்கள் தங்கி இருக்க அதிகாரிகள் இடமளித்து ஒத்துழைக்கின்றார்கள். இந்த அன்னதானத்துக்கு சிங்களவர்களும் தாராளமாக நன்கொடை அளித்துள்ளார்களாம். சிவன்கோவிலுக்கு சிங்களவர்கள் அதிகமாக வந்து வழிபடுவதாயும் அறிந்தேன். சில அரசியல் 'வியாதி'கள் இரு சமூகத்தையும் பிரித்துப் பிளவுபடுத்த முற்படுகையில், சிவபெருமானும் முருகனும் இருசாரினரையும் எப்படி ஒற்றுமைப்படுத்தி வருகின்றார்கள்!

தென்னிலங்கையிலே தமிழருக்கு இனி இடமுண்டா என்ற கேள்வி சில வருடங்களுக்கு முன் எழுந்ததல்லவா? ஆனால் தெய்வ அருளால் தமிழர்களுக்கு இன்று மட்டுமல்ல என்றும் அங்கு இடமுண்டு என்பதை நேரில் காணக்கூடியதாக இருந்தது.

ஃ ஃ ஃ

தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்சார்வினும்தொண்டர் தருகிலாப், பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தைப் புகலூர் பாடுமின் புலவீர்காள், இம்மையே தரும்சோறும்கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம், அம்மையே சிவலோகம் ஆள்வதற் கியாதும் ஐயுறவில்லையே

— ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலியிலிருந்து பிரதமர் 'ஹெலிகாப்டரில்'

# யாழ். நகர் வருவார்

## விமானநிலைய வரவேற்பில் தமிழ்எம்.பி.க்கள்கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், வியாழன்

பிரதமர் டட்லி சேனநாயக்கா 9-ந் திகதி காலை 10 மணியளவில் 'ஹெலிகாப்டர்' விமானம் மூலம் யாழ்ப்பாணம் மத்தியந் கல்லூரிமைதானத்தில்வந்து இறங்குவார். இத்தகவலை தமிழ்க்காங்கிரஸ் காரியதரிசி திரு. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

அன்று காலை 9 மணியளவில் பிரதமரும், மந்திரிகளும், உதவி மந்திரிகளும், எம். பிக்களும் இரு விமானங்களில் பலாலி விமான நிலையத்தில் வந்தடைவார்கள். அங்கிருந்து பிரதமர் மட்டும் ஹெலிகாப்டரில் யாழ்ப்பாணம் வருவார். மற்றும் மந்திரிகள், உதவி மந்திரிகள், எம். பிக்கள் விமான நிலையத்திலிருந்து காரில் யாழ்ப்பாணம் வருவார்கள்.

விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வரவேற்புகள் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன.

விமானநிலையத்தில் உத்தியோகபூர்வமான வரவேற்பு அளிக்கப்படும். அங்கு பிரதமர் டட்லி சேனநாயக்காவை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா வரவேற்பார். இந்த வரவேற்பில் தமிழ் எம் பிக்களும் கலந்துகொள்வார்கள்.

மத்தியகல்லூரி மைதானத்தில் பிரதமரை காங்கிரஸ் வரவேற்புக்குழுத் தலைவர் திரு ரி சிவசிதம்பரம் மாலை சூட்டி வரவேற்பார் அங்கிருந்து பிரதமர், மந்திரிகள், உதவி மந்திரிகள், எம் பிக்கள் ஊர்வலமாக கோட்டை முற்றவெளி மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் அங்கு வரவேற்பு அளிக்கப்படும்

முற்றவெளி மைதானத்திலிருந்து மகாத்மாகாந்தி வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து, மின்சாரநிலைய வீதி வழியாக வெலிங்டன் தியேட்டர் சந்தியை வந்தடையும் அங்கிருந்து பெருமான் கோவில் வீதியாகச் சென்று ஆனைப்பந்திச் சந்தியை அடைந்து, நல்லூர் கந்தசுவாமி கோவிலை அடையும்.

பிரதமரும், மந்திரிகளும் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் தரிசனம் செய்த பின் நாகவிகாரைக்குச் சென்று வழிபாடு செய்வார்கள். அங்கிருந்து 1-ம் குறுக்குத் தெரு வழியாக பிரதான வீதியை அடைந்து 'பாம் கோட்'டிற்குச் செல்வார்கள். சந்திக்குச்சந்தி வரவேற்பு அளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் திரு சங்கரப்பிள்ளை கூறினார்.

## சில்லாலை கொலை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியா

சில்லாலை கொலை வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் பி. சிறிஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணை நடுவில் ஜூரி சபையினர் விசாரணையைத் தொடர்ந்து நடத்தவிரும்பவில்லையென ஏகமனதாகத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலை செய்துதீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் சில்லாலையில் 1955-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 30-ம் திகதி அருளப்பு அல்பிரட் அல்லது இரத்தினம் என்பவர் அருளப்பு அருளானந்தன் அல்லது துரையப்பா என்பவரைக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் எஸ், சரவணமுத்து, அட்வகேட் எம். எஸ். சுந்தரலிங்கத்தின உதவியுடனும், புறக்டர் ஏ. அன்ரனியின் அனுசரணையுடனும் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் திரு. ஆர். ஆர் தங்கராசா நியமிக்கப்பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## நியமனங்களை விரைவில் வழங்குமாறுபிரதமரைக்கோரமுடிவு

### கலைப்பட்டதாரிகள் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யும் பிரதமரை. நேரிற்கண்டுதங்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு கோருவதென்று இலங்கைப் பட்டதாரிகள் சங்கத்தின் புதிய நிர்வாகசபை முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி சங்க வருடாந்தக் கூட்டத்தில் பழைய நிர்வாகசபை வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காததை புதியசபை கண்டித்தது. பிரதமர் திரு டட்லி சேனநாயக விடம் சமர்ப்பிப்பதற்கென முக்கிய தீர்மானங்கள் கொண்ட ஒரு மகஜரும் சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

"பட்டதாரிஆசிரியர்களின் நியமனங்களைத் தாமதமின்றிச் செய்யவேண்டும். எந்த வெற்றிடங்களையும் சிதைக்கக்கூடாது. எழுதுவினைஞர் சேவையில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு தரமான பிரிவில் வேலைவாய்ப்புக்கு வழி வகுக்கவேண்டும்.

பட்டதாரிகள் ஆசிரியர்களுக்கென ஏற்படும் காலியான இடங்களைத் தாமதிக்காது வருடாவருடம் நியமனங்கள் வழங்கவேண்டும்" என்பன மகஜரின் முக்கிய விஷயங்களாகும்.

கூட்ட ஆரம்பத்தில் நடைபெற்ற புதியநிர்வாகசபைத் தெரிவில், தலைவராக திரு எம். பத்திநாதரும், உபதலைவர்களாக திரு வே சிற்றம்பலம், செல்வி நீ சண்முகமும், காரியதரிசியாக திரு சி துரைராசா. திரு வி நடராசாவும், பொருளாளராக திரு எம் ஏ அலோசியசும், நிர்வாகசபை அங்கத்தவர்களாக திரு ஏ அருணாசலமும், திரு எம டி எப் சேவியர், திரு மி கனகரத்தினம். செல்விகள் பி கந்தையா, எம் சண்முகம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் எச்சரிக்கை

கொழும்பு, ஆக 4

"பொலிஸ் சேவையில் முரடர்களுக்கும் திறமையற்றவர்களுக்கும் இடமில்லை" என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஜோன் அட்டிகலை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் கஸட்டில்வெளியிடப்பட்டுள்ள ஒரு சுற்றறிக்கையில் ஐ. ஜி. பி மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். அவர் அதில் மேலும் கூறியதாவது:

பொதுமக்களைப் பாதுகாப்பதும் அவர்களுக்குச் சேவை செய்வதுமே பொலிஸ் சேவையின் நோக்கம். சந்தேகநபர்களும், குற்றவாளிகளும்கூடப் பொதுமக்களில் ஒரு பகுதியினரே. அவர்களையும் சரிவர நடாத்த வேண்டும். பொதுமக்கள் சம்பந்தப்பட்டவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் அத்துமீறிய நடவடிக்கையை அங்கீகரிக்க முடியாது.

## நீக்ரோ குழப்பம்

றெபிரான்கோ, ஆகஸ்ட்3

நீக்ரோக்களை அதிகமாகக் கொண்டுள்ள மாவட்டத்தில், 150 தொடக்கம் 200 வரையுள்ள நீக்ரோக்கூட்டமொன்றுகுழப்பமிளைவித்ததன்பயனகபொலீசார் ஆகாயத்தில் சுட்டுக்கூட்டத்தைக் கலைத்தனர். சில கடைகளின் ஜன்னல்கள் நொறுக்கப்பட்டன. 27பேர் கைது செய்யப்பட்டனர். பதினெட்டு வயது நீக்ரோ இளைஞனொருவன் துப்பாக்கி சூட்டுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (பி: டி. சி)

## ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்

கொழும்பு, ஆக. 4

காலியிலுள்ள பொட்டல என்னுமிடத்தில் என். ஏ. கலுஅப்புஹாமி என்ற கமக்காரரின் மனைவியான நந்தாவதி என்பவர் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். இரண்டும் பெண்குழந்தைகளே. கொப்பூழுக்கருகே இருகுழந்தைகளும் ஒட்டியிருக்கின்றன. இருவரது நிறையும் 16 றாத்தலாகும். குழந்தைகள் இரண்டும் சேமமாக இருக்கின்றன.

ஜனப் பிரதிநிதிகள் சபை

# அக்டோபரில் இரு இடைத்தேர்தல்

## பண்டாரவளை எம். பி. ராஜிநுமா!

கொழும்பு, புதன்

ஜனப்பிரதிநிதிகள் சபையில் இரண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு அக்டோபரில் இடைத்தேர்தல் நடக்க ருக்கிறது.

தேர்தல் ஆட்சேபனை வழக்கில் பெந்தார-எல்பிட்டியா தொகுதியின் எம். பியாகவிருந்த திரு. ஆர். ஜி. சமரநாயக்கா பதவியிழந்தார்.

பண்டாரவளை எம். பி. திரு. ஜே. ஜி குணசேகரா நேற்றைய தினம் தமது பதவியை ராஜினாமாசெய்துள்ளார். சுகவீனம் காரணமாகவே தாம் இப்பதவியை ராஜினாமா செய்வதாகத் தெரிவித்துள்ளார். பண்டாரவளைக்குத் தேவையானவற்றைச் செய்யக்கூடிய ஒரு புதிய நபரைத் தேர்ந்தெடுக்கத் தமது ராஜினாமா வழிவகுக்கிறதென்று அவர் கூறினார்.

இந்த இரு வெற்றிடங்களையும் நிரப்புவதற்காகவே இந்த இடைத் தேர்தல் நடக்கவிருக்கிறது.

திரு. சமரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர். திரு. குணசேகரா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்.

மானிப்பாய்

## பட்டினசபை பரிபாலன அறிக்கை

மானிப்பாய், செவ்

மானிப்பாய்ப்பட்டின சபை காரியாலயமைதானத்தில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும் பொதுக்கூட்டமொன்றில், மானிப்பாய் பட்டினசபை பரிபாலன அறிக்கை, வரியிறுப்போருக்கு சமர்ப்பிக்கப்படும். பட்டினசபைத்தலைவர் திரு சி. இராஜேந்திரன் ஜே. பி. தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராக உயர் நீதிமன்றநீதியரசர்திருஸ்ரீஸ்கந்தராசா கலந்துகொள்வார், சமூகஜோதி திரு. சி தியகாராசாஜே பி. உள்ளூராட்சி உதவிஆணையாளர்திரு எஸ் சி மாணிக்கவாசகர், திரு. எச். எச். பேரின்பநாயகம் திரு. எஸ். ஆர். கனகநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

ஆசிரியருக்குக் கடிதம்

## இப்படியும் ஒரு சங்கடம்

காரைநகர்-தர்மபுரம் பஸ்ஸில் திடுமென மூன்று டிக்கெட் பரிசோதகர்கள் ஏறினார்கள். டிக்கெட் பரிசோதகர்களுக்குத் தமிழ் தெரியாது. ஏறியவர்கள் பிரயாணிகளிடம் எது எதுவோ கேட்டார்கள். பிரயாணிகள் பேசாமல் இருந்தனர். கேள்வி கேட்டவர்களுக்கு வந்தது கோபம். உரத்த குரலில் சத்தமிட்டனர், பிரயாணிகள் சற்றும் அசையவில்லை. ஈற்றில் பஸ்ஸின் கடையில் நின்ற பஸ்கண்டக்டர் விரைந்து வந்து நிலைமையைப் பிரயாணிகளிடம் கூறி டிக்கட்டுகளைக் காட்டும்படி கூறியதின்பேரில் வேண்டாவெறுப்பாக காட்டினர்.

டிக்கட் பரிசோதிப்பவர்கள் பிரயாணிகளின் பாஷையைப் புரிந்துகொள்வதுடன் அவர்கள் டிக்கட் பரிசோதகர்கள் என்பதற்கான உடையை அணிந்திருந்தால் இம்மாதிரியான அசம்பாவிதங்கள் நடைபெறாது.

க. ம. பத்மநாதன்
பரந்தன்.

## தமிழ் இலக்கிய மன்றம் புதுவருட உத்தியோகத்தர்கள்

கொழும்பு, புதன்

ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தமிழ் இலக்கிய மன்ற ஆண்டுப் பொதுக் கூட்டம் திரு. ஆ. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு ஆண்டில் மன்றம் நாடுமுழுவதிலும் உள்ள அரசாங்கமும், கூட்டுநிறுவனங்களுக்கிடையே நடாத்தும் கவிதை, கட்டுரை பேச்சுப்போட்டிகளை தீவிர கவனஞ் செலுத்தி விரிந்த அடிப்படையில் நடாத்துவதெனவும், அவசியம் ஏற்படின் மாகாணந்தோறும் பேச்சுப்போட்டியை நடாத்துவதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ஆ. சிவசுப்பிரமணியம், துணைத் தலைவர், திரு. ச. இ. பசுபதி, செயலாளர்: திரு. வ முருகப்பன், துணைச்செயலாளர்: திரு. செ. கனகரத்தினம், பொருளாளர்: திரு. சி சண்முகம், துணைப்பொருளாளர்கள்: திருவாளர்கள் சி. தில்லைநாதன், ஆ. வி. பொன்னம்பலம், நூலக நிர்வாகி: திரு. அ. சோமசுந்தரம், துணை நூலக நிர்வாகி: திரு. வே. கந்தையா, புத்தகக் குழு உறுப்பினர்: திரு தி. ஞானரத்தினம், கணக்குப் பரிசோதகர்கள்: திருவாளர்கள் தி. நடேசன், க. கிறகரி ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்; திருவாளர்கள் க. மாரிமுத்து. ந. ஞானசம்பந்தன்.

## பாராட்டுவிழா

காரைநகர், புதன்

கடந்த 40 ஆண்டுகளாக காரைநகரில் தங்கியிருந்து சைவத்துக்கும், தமிழுக்கும் அருந்தொண்டு ஆற்றிய ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகருக்கு காரைநகர் சைவ மகா சபையினர் சேவை நலம்பாராட்டுவிழா ஒன்றை நடத்தவிருக்கின்றனர். இம் மாதம் 7ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவிருக்கும் இவ்விழாவில் வட்டுக்கோட்டை எம் பி, திரு. அ. அமிர்தலிங்கம் அன்னாரது உருவப்படமொன்றைத் திறந்து வைப்பார். பொன்னாடை போர்த்துதலும் அறிஞர்கள் பாராட்டுரைவழங்கலும் இடம் பெறும். பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை வித்துவான் க. முருகேசனார் உட்பட பல அறிஞர்கள் பாராட்டுரை வழங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலக நாஸ்தி

ஒரு வாலிபன் உலகத்திலுள்ள சகல கலைகளையும் கற்று அறிவில்சிறந்தபெரும் பண்டிதனாக விளங்கினான். படிப்பிற்கேற்ற அடக்கமும் பணிவும் அவனிடம் காணப்பட்டன. ஆனால் கல்வியிற் சிறந்த சான்றோர் கூடுமிடங்களில் அவன் வாயைத் திறப்பதில்லை. ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருப்பான்.

இதைக்கண்ட அவனுடைய தந்தை மிகவும் விசாரப்பட்டு, 'மகனே, நீ இவ்வளவெல்லாம் படித்திருந்தும் அறிஞர்கள் முன்னிலையில் ஏன் ஒன்றும் பேசாதிருக்கிறாய்? நீயும் அவர்களோடு கலந்து உரையாடினாலென்ன? அதை உன் தகப்பனாகிய நான் பார்த்து மகிழ வேண்டாமா என்று ஒரு நாள் கேட்டார்.

அதற்கு அந்த வாலிபன் சொன்னான்: 'அப்பா, நான் கற்றதோ கைம்மண்ணளவு கற்க வேண்டியது இன்னும் உலகளவு இருக்கிறது அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது நானும் குறுக்கிட்டு வாயைக் கொடுக்கும் சமயம், எனக்குத் தெரியாத விஷயம் ஒன்றை அவர்கள் கேட்டுவிட்டால் நான்வெட்கித் தலை குனிய வேண்டுமல்லவா? ஆகையினால் தான் நான் மௌனமாக அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்' என்று கூறிவிட்டு திருஷ்டாந்தமாக ஒரு கதையையும் சொன்னான்.

குடியானவன் ஒருவன் அறுந்துபோன தன் சப்பாத்தை ஆணி அடித்துத் திருத்திக் கொண்டிருந்தான். அவ்வழியால் போன ஒரு போர்வீரன் அதைக் கண்டுவிட்டு தன் குதிரையிலிருந்து இறங்கி குதிரைக்கும் 'லாடன்' அடித்துத் தரும்படி கேட்டான். குடியானவன் தனக்கு அந்த வேலை தெரியாதென்று எவ்வளவோ சொல்லியும் போர்வீரன் கேட்கவில்லை கடைசியில் குடியானவனுக்கு முதுகில் நல்ல பூஜை கிடைத்தது. சப்பாத்துத் தைக்கும் வேலையை அவன் சப்பாத்து தைக்கிறவனிடம் ஒப்படைத்திருந்தால் ஒன்றும் நேர்ந்திராது. தானே தெரிந்தவன்போல் அந்த உத்தியோகத்தைப் பார்க்கப் போய்த்தான் போர்வீரனிடம் அடிவாங்க நேர்ந்தது. தெரிந்தவன்போல் நடந்து கொண்டதனால் இந்த ஆபத்து அவனுக்கு ஏற்பட்டது.

நம்மவர்களில் எத்தனையோ பேர் மற்றவர்கள் பேசுவதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிராமல் தாங்களும் ஆழமறியாமல் காலை வைத்துப் பின்னர் அவமானத்தோடு பின் வாங்குவதை அடிக்கடி காண்கிறோமல்லவா? அவர்களுக்கு இந்தக் கதை நல்லதோர் படிப்பினை. நாம் ஒரு விஷயத்தைப்பற்றி பேசத் தொடங்குமுன் அந்த விஷயத்தைப்பற்றி நம்மைவிடக் கூடுதலாகத் தெரிந்தவர்கள் பலர் இருக்கக்கூடும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். 'எப்பொருள் யார் யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார்.

காதைத் தீட்டி வைத்துக் கொண்டு மற்றவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிராமல் நாம் குறுக்கே விழுந்து நம்முடைய (அஞ்) ஞானத்தை வெளிப்படுத்த விரும்பும்போது அறிவை இழக்கிறோமேயன்றி அறிவைப் பெருக்குவதில்லை.

# நீதி வழுவா நெறி முறையில்

ஒரு பையன் சைக்கிளைத் திருடிவிட்டான். வழக்கு நடந்தது. நீதவான் தமது தொகுப்புரையில் பையன் சைக்கிளைத் திருடவில்லை என்று தீர்ப்புக் கூறுமாறு ஜூரிமாருக்குச் சொன்னார்.

ஜூரிசபைத் தலைவர் உடனே எழுந்துநின்று மிக்க பணிவோடும் கடமையோடும் 'கனம் துரையவர்களே! நாங்கள் சைக்கிளைத் திருடிய பையனை சுற்றவாளி என்று தீர்மானித்திருக்கிறோம்'' என்றார்.

ஃ ஃ ஃ

ஒரு பெண் வழக்கில் சிக்கிக் கொண்டார்.

நீதவான் அவளைப் பார்த்து 'கவனம், நீங்கள் சத்தியம் செய்திருக்கிறீர்கள். ஆகையினால் உண்மையைத் தான் சொல்ல வேண்டும். உங்களுடைய வயதுஎன்ன?" என்று கேட்டார்.

'21 வயதும் சில மாதங்களும்'

'எத்தனை மாதங்கள்?'

'128 மாதங்கள்!'

ஃ ஃ ஃ

காரை வேகமாகச் செலுத்தியதற்காக ஒருவர் மீது கோட்டில் வழக்குத் தொடரப்பட்டது.

நீதவான்: நீர் காரை அறுபது மைல் வேகத்தில் செலுத்தினீராமே, உண்மை தானா?

எதிரி: இல்லை, துரையே! நான் ஆக 15 மைல் வேகத்தில்தான் செலுத்தினேன்.

நீதவான்: எப்படித் தெரியும் உமக்கு.

எதிரி: நான் பல் கட்டும் வைத்தியரிடம் போய்க் கொண்டிருந்தேன்.

# நால்வரின் அனுபவங்கள்

—டா. ஐ. ஏசுதாஸ்—

(அண்ணாமலை பல்கலைக் கழகம்)

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் தமிழ்நாட்டுசைவ சமய குரவராவர். அவர்களது சமூக, சமய அனுபவங்களை முறையே மகன்மை நெறி, அடிமைவாழ்வு, தோழமை, சன்மார்க்கம் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தி கூறுவது வழமை.

ஆனால், அவர்கள் எல்லோருமே இந்த நான்கு வகை அனுபவங்கள் கைவரப் பெற்று இருந்தனர் என்பது அவர்களது வேறு பாடல்களால் விளங்குகின்றது இவற்றைத் தவிரவேறுபல சமூக, சமய அனுபவங்களையும் அவர்கள் அனுபவித்திருந்தனர்.

திருஞானசம்பந்தர் குழந்தை உள்ளம் கொண்டிருந்தார். அவர் சிவபெருமானை நேரிலே கண்டு அனுபவித்தவர், சில சமூக. சமய பூசல்களில் பங்கு பற்றி வெற்றி வாழ்க்கை நடத்தியவர். அவரது தேவாரப் பதிகங்களில் உலகவாதத்தோடு தொடர்புடைய திருப்பாசுரம் அவரது சமய அனுபவத்தைக் காட்டும் பல பகுதிகளில் ஒன்று.

அப்பர் துன்பங்கள் பலவற்றை மேற்கொண்ட அடியார்; விவிலியத்தில் கூறப்பட்டுள்ள யோபு, தானியேல், பவுல் என்பவர்களின் அனுபவமும் இவரது அனுபவமும் சிற்சில காரியங்களில் ஒன்றுபோன்றுள்ளன; பல முரண்பாடான கொள்கைகளையும், அனுபவங்களையும் அவர் இணைத்தார். அவற்றுள் ஒன்று தபாமூல தன்மம், இது அருளையும் கர்மத்தையும் பிணைக்கிறது. அப்பர் சமூக சேவையை சமய சேவையாகக்கொண்டு வாழ்ந்து காட்டியவர்.

சுந்தரர் சிவதொண்டர்களின் கூட்டுறவைப் பெரிதும் போற்றியவர். இவர் சிவனோடும் சைவ அடியார்களோடும் நட்புமுறையோடு பழகியவர். கடவுள் வழிபாட்டில் அடி அடியாகிப் பிறந்ததே இவரது சமூக, சமய அனுபவம்.

மாணிக்கவாசகரது சமூக சமய அனுபவத்தில் நான்கு நிலைகளைக்காணலாம்.

அவையாவன: கடவுளற்ற நிலை, கடவுளைப்பற்றியநிலை, கடவுளை விட்டநிலை, கடவுள் பக்கம் திரும்பிய நிலை இவை யாவும் கடவுள்தொடர்பையும் மானிடதொடர்பையும் அடிப்படையாகக் கொண்டவை.

கிறித்தவத்தின் நால்வரான மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் போன்று சைவசமயத்தில் மேலே கூறப்பட்ட நால்வரும் திகழ்கின்றனர்.

சைவமும் வைணவமும் சமூக வாழ்வை முக்கியப்படுத்துகின்றன. அவை சமூக வாழ்விற்குப் புறம்பானவை அல்ல.

## பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பி.

# வேனில் விழா

இனங்கா மாக்களை யிணங்கும் பழங்கள்
காணு முன்னர்க் காக்கை யாக்கிடும்,
மாணுப் பிழாவில் மாந்திய வழியே
தேமபிய காதலர் சிந்தை பின்னிடக்
கூம்பிய நிலையிற் கொக்காக் கும்மே;
விடம்போலேறி யுடம்பிற் கலப்புழி
அறிவு மயங்கவி ழைகலாதன
சொல்வன நினைப்பன சொல்லா தனவும்
கிளிபோற் களத்தலின் கிளியாக்கும்மே;
முள்ளுக் கொள்ளா வேலியு மில்லை
கள்ளுக் கொள்ளா வயிறு மில்லை
எனனும் முதுமொழிக் கிலக்கிய மான
வெறியின் களிப்பு மிருந்திடு காலை
உடையும் நடையும் ஒருவழித் தளரக்
கையும் மெய்யுங் கம்பிதங் காட்ட
ஆடியும் பாடியும் இணங்கியும் பிணங்கியும்
நீடிய வழிதோறும் பீடல செய்தலின்
அழகன் றூதனும் பகைவனு மாக்கும்;
ஈற்றில் இராவணற் கினிய தம்பி
கூற்றடு கும்ப கன்னனு மாக்கும்;
இத்திறம் வாய்ந்தே யிம்மையும் மறுமையும்
பல்வகைத் தீமை பயப்பது கண்டே
நல்லியற் புலவர் நஞ்செனு விலக்கிய
கள்ளினைப் பொருளெனக் கருதா ரன்றே.

கள் குடிப்பவர்களுக்கு ஆறு பருவங்களுண்டாம், முதலாவது காக்கைப் பருவம், இரண்டாவது கொக்குப் பருவம், மூன்றாவது கிள்ளைப் பருவம், நான்காவது அனுமப்பருவம், ஐந்தாவது இராவணப் பருவம், ஆறாவது கும்பகர்ணப் பருவம்.

காக்கை கரைந்துண்ணும் பறவை. தீனைக் கண்டதும் தன் கூட்டத்தவரை 'கா, கா,' என்று கூப்பிட்டு கலந்துண்ணும். அதுபோலக் குடியரும் 'தனித்துண்பதற் சுவை பிறவாமை கண்டு, தமக்குப் பெரிதும் இணக்கமான சிற்றினத்தாரோடு இனிதிருந்து அரப் பருகி மகிழ்வர்.' இவ்வாறு பண்டிதர் இளமுருகனார் அவர்கள் விளக்கம் கூறுகிறார். சாதகனைப் போல ஊரெல்லாம் அலைந்து உலைந்து கள் இருக்கும் இடத்தைத் தேடித் திரிவார் என்பதும் ஒரு வியாக்கியானம். இரண்டாவது கொக்குப் பருவத்தில் 'நீர்க்கரையில் ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கைப் போல் கள்ளருந்திய குடியரும் நரம்பு மண்டிலத்தில் மதுச்சாரம் ஏறுதலினாற் சோர்ந்து மயக்கமுற்றுச் சிறிது பொழுது செயலின்றி யிருப்பராம்.' பனையிலிருந்து கள் இறக்கும் வரை பொறுதியாகக் காத்திருப்பதையும் கொக்குப் பருவம் என்று கூறலாம்.

'மூன்றாவது கிள்ளைப் பருவம். கிளி சொல்வதைச் சொல்லும் முன்பு பழகிய வாசகங்களையே சொல்லும், சில காற்பாடும். அதுபோலக் குடியரும் வெறி தலைக்கேறியதும் பழங்கதை சொல்லத் தொடங்குவர். பின்னர் தமது கீழறிவு நிலையிற் கருக்கொண்டெழுந்த அவையல் கிளவிகளை மெல்ல மெல்லப் புகன்றும் பாடியும் செல்வர்!

நான்காவது அனுமப் பருவத்தில் 'இலங்கையிற் பண்டை நாளிலிருந்த மதனச் சோலையை அழித்தற்கு ஆவேசமுற்ற அனுமன், துள்ளியுந் தாவியும் ஓடியும் ஆடியும் நிலையின்றித் திரிந்தமை போலக் குடியரும் நெடுந் தெருத்தோறும் குரங்குச் சேட்டை ஆயிரம் செய்வர்.'

அடுத்த இராவணப் பருவத்தில் 'கள்ளுக் காமத்தை விளக்குமாதலின் இராவணனைப்போலக் குடியரும், முறை, பருவம், நெறி என்பனவற்றை மறந்து பெண்டிர்பால் பெருந்திணையொழுக்கம் பயில்வர்' அவனைப் போல முரட்டுத்தனமான சண்டையுமிடுவர்.

ஆறாவது பருவத்தில் 'நரம்பு மண்டலமும் மனமும் சோர்வுற்றுச்சிந்தனை சொற்செயலிழந்து அறிவு சாக்கிர சொப்பனம் நீக்கிச் சுழுத்தியில் நிலைக்க நித்திரை வரங்கொண்ட கும்பகர்ணன் போலக் குடியரும் நெடுந்துயில் கொள்வர்!

(பண்டிதர் சோ. இளமுருகனார் அவர்கள் எழுதிய 'வேனில் விழா' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

அடுத்த

பஞ்சாமிர்தம்

12-8-66

# இதுவல்லவோ இலட்சிய கிராமம்!

பீகாரில் ''சுந்தரராவ்'' என்ற ஒரு சிராமதானக் கிராமம் இருக்கிறது. அந்தவூரின் சிறப்பான அம்சங்களில் ஒருசிலவற்றைக் கூறுகிறோம்.

1. இக்கிராமத்தில் எல்லோரிடமும் நிலமிருக்கின்றது.

2, எந்தச் சண்டையும் கிராமத்திற்கு வெளியே, பஞ்சாயத்திற்கோ, நீதிமன்றத்திற்கோ எடுத்துச் செல்லப்படுவதில்லை. கிராமத்தில் சண்டையே இல்லை எனலாம், ஏற்பட்டாலும் அங்கேயே தீர்த்துக்கொள்கிறார்கள்.

3 கிராமத்து மக்கள் மதுபானம் செய்தல், புலாலுண்ணுதல் ஆகிய இரண்டையும் விட்டுவிட்டார்கள் குளித்தபிறகே அவர்கள் உணவு அருந்துவார்கள்.

4. கிராமத்தில் தேநீர் அருந்தும் பழக்கமிருந்தது ஆனால் 2—10—65 காந்தி பிறந்தநாள் முதல் ''தேநீரை விட்டுவிடுவோம்'' என்று கிராமசபை முடிவு செய்தது; அதன்படி யாரும் இப்போது தேநீர் குடிப்பதில்லை.

5. ''சிலருடைய நிலம் அடமானம் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் கிராமசபை அதை விடுவித்து மிகச் சாதாரண நிபந்தனைக்குட்பட்டு மக்களிடம்கொடுத்திருக்கிறது.

6 கிராமசபை, தரிசுநிலத்தில் பழத்தோட்டத்தையும், விறகுக்குத் தேவையான மரங்களையும் நட்டு வளர்க்கிறது.

7. பஞ்சாயத்து சபையின் உதவியைக் கொண்டு கிராமசபை ஒரு பம்புசெட் வாங்கி, அதைத் தள்ளு வண்டியில் வைத்து எல்லாக்கிணறுகளுக்கும் எடுத்துச் செல்லும் வகையில் ஏற்பாடு செய்திருக்கிறது.

8. கிராமவாசிகள் விருந்துகள், சடங்குவகைகள் ஆகியவற்றின்போது விருந்தளித்தல் போன்ற வழக்கத்தையும், வரதட்சிணை கொடுக்கும் வழக்கத்தையும் விட்டுவிட்டனர்.

9. காந்திநூற்றாண்டு விழாவிற்குமுன், கிராமம் உடைவிஷயத்தில் தன்னிறைவு பெறவேண்டும் என்று கிராமமக்கள் உறுதிபூண்டிருக்கிறார்கள்.

10. நெல், பருப்பு போன்ற கிராமத்து விளைபொருட்களை அங்கேயே உபயோகப் பொருள்களாக மாற்றாமல் வெளியே அனுப்புவதில்லையென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

('கிராம ராஜ்யம்' என்ற பத்திரிகையிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிங்ஸ்டனில் இன்று ஆரம்பமாகும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்

## இலங்கை வீரர்கள் ஐவர் கலந்து கொள்கின்றனர்

கிங்ஸ்டன், ஆகஸ்ட் 3

**ஜமைக்கா தலைநகர் கிங்ஸ்டனில் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகும் எட்டாவது பிரிட்டிஷ் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை உள்ளிட்டு 35 நாடுகள் கலந்து கொள்கின்றன.**

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் இலங்கை வீரர்கள் ஓட்டப்போட்டி தவிர நீச்சல் போட்டி, இலக்கு வைத்த துப்பாக்கியால் சுடும் போட்டி, குத்துச் சண்டை ஆகியவற்றில்பங்கு பற்றுவார்கள். இப்போட்டிகளில் இலங்கைக்கு ஒருசாதகமான நிலை ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்காக ஐந்துவீரர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று ஏற்கெனவே இங்கு வந்து சேர்ந்துவிட்டது.

கார்டிப்பில் 1958லும் 1962லும் பங்குபற்றியநாடுகளின் தொகையும் முப்பதைந்தேயாகும். இம்முறை 36 நாடுகள் பங்குபற்றிப் புதிய சாதனையை ஏற்படுத்துமெனப்போட்டியை ஒழுங்கு செய்தவர்கள் நம்பியிருந்தனர் ஆனால் கடைசி நேரத்தில் மால்டா வாபஸ் பெற்றதனால் இந்நம்பிக்கை விண்போயிற்று.

இந்தியா, அவுஸ்திரேலியா இங்கிலாந்து, இலங்கை, மலேசியா, பாகிஸ்தான், சிங்கப்பூர், ஸ்கொட்லாந்து, நியூசிலந்து ஆகிய பல நாடுகள் இப்போட்டிகளில்பங்கு பற்றுகின்றன.

## இன்று ஆரம்பமாகும் 4-வது கிரிக்கெட் டெஸ்ட்

லண்டன், ஆக. 3

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையேயான நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

இதுவரை நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்டுகளில் மேற்கிந்தியா இரண்டில் வெற்றிபெற்றிருக்கின்றன. ஒரு போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஐந்து கிரிக்கெட் டெஸ்டுகளுடன் இரு கோஷ்டிகளுக்குமிடையேயான இவ்வருட சுற்றுப்போட்டி முடிவடைகிறது.

ஃ

தென்மராட்சி

## சர்வதேச கூட்டுறவாளர்தின போட்டிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாச சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா மறவன்புலோ ப. நோ. கூ. ச மூன்றலில் சமாசத் தலைவர் நா. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு யாழ் கிழக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு மு. மதிபாலசிங்கம் பரிசில் வழங்கினார்.

சில முடிவுகள் வருமாறு: பேச்சுப்போட்டி: மேற்பிரிவு: க. மனோன்மணி, தி முருகேசு, செல்வி சு நாகரத்தினம், மா. மகாலிங்கம், மத்தியபிரிவு: சு. கமலாஜினிதேவி, சு. இராசமணி, வீ. விக்கிரமராசா, க. பூமகாதேவி, கீழ்ப்பிரிவு: ச. சிவசோதியம்மா, கா நடராசா, த. பூரணேஸ்வரி.

கூட்டுறவுக் கீதப்போட்டி மேற்பிரிவு; நா சரஸ்வதி, க சிவஞானசேகரம், மு. லிங்கேஸ்வரி, மத்தியபிரிவு: அ. சாந்தம்மா, க தவமணி, க அழகம்மா, கீழ்ப்பிரிவு: த கார்த்திகேசு, க. நித்தியானந்தன், பூ தர்மலிங்கம்.

நடனப் போட்டியில் கைதடி ஆங்கில பாடசாலை முதலிடத்தையும், கைதடி மூத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை, இரண்டாம்இடத்தையும், கோயிலாக்கண்டி மகாலக்குமி வித்தியாசாலை மூன்றுமிடத்தையும் பெற்றன.

நாடகப் போட்டியில் கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை, எருதிடல் அரசினர் பாடசாலை, கைதடி வடக்கு குருசாமி வித்தியாசாலை.

### பாரதிகழக விளையாட்டுப் போட்டிகள்

வல்வெட்டித்துறை, செவ்

திக்கம் பாரதி விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி வழக்கறிஞர் திரு. வி பி சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிகளில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட பருத்தித்துறை எம் பி க. துரைரத்தினம் பேசுகையில் விளையாட்டுப்போட்டிகள் மூலம் வாலிபர்களின் உடல்வளர்ச்சி மட்டுமல்லாது உளவளர்ச்சியும் ஏற்படுகின்றதென்றும் கூறினார்.

போட்டிகளில் பச்சை, மஞ்சள், சிவப்பு இல்லங்கள் முறையே முதலாம் இரண்டாம் மூன்றும் இடத்தைப் பெற்றன. இவ்வருட சாம்பியன்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். மேற்பிரிவு: திரு எம் தங்கராசா மத்தியபிரிவு, திரு க இரத்தினம், கீழ்ப்பிரிவு திரு எம். சிவானந்தம்.

### எல்லாளன் முதலிடம்

குமுளமுனை, புதன்

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் இல்லங்களிடையே விளையாட்டுப் போட்டிகள் கல்லூரிமைதானத்தில் திரு. சீ. கனகசுந்தரம் தலைமையில் நடைபெற்றன.

எல்லாளன் இல்லம் முதலிடத்தையும், ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன், சங்கிலியன் இல்லங்கள் முறையே இரண்டாம், மூன்றும் இடங்களையும்பெற்றன. போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு திரு. கே. வி. நவரத்தினம் பரிசில்கள் வழங்கினார்.

### சோழன் இல்லம் சாம்பியனாகியது

வல்வெட்டித்துறை, புதன்

புலோலி மெதடிஸ் தமிழ் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி புலோலி கிராமசபைத்தலைவர் திரு ரி சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்வருட சாம்பியனாக சோழன் இல்லம் தெரிவு செய்யப்பட்டது சேரன், பாண்டியன் இல்லங்கள் இரண்டாம் மூன்றும் இடத்தைப்பெற்றன. உடுப்பிட்டி வட்டார வித்தியாதரிசி திரு வீ தர்மசங்கரி பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார் வெற்றிபெற்றவீரர்களுக்கு திருமதி எம். ஆழ்வாப்பிள்ளை பரிசில்கள் வழங்கினார்.

கரபந்தாட்டம்

### பாஷையூர் வெற்றி

கனகராயன்குளம், புதன்

பாஷையூர் சென் அந்தனீஸ் வீரர்களுக்கும், நல்லூர் ஜனசக்தி நிலைய கோஷ்டியினருக்குமிடையில் நடந்த சிநேகபூர்வமான, கரபந்தாட்டப் போட்டியில் பாஷையூர் சென். அந்தனீஸ் வெற்றியீட்டியது. முதல் ஆட்டத்தில் ஜனசக்திவீரர்கள் 14 புள்ளிகளையும் பாஷையூர் சென். அந்தனீஸ் வீரர்கள் 9 புள்ளிகளையும் எடுத்தனர். இரண்டாவது ஆட்டத்தில் பாஷையூர் வீரர்கள் 14 புள்ளிகளையும் ஜனசக்தி வீரர்கள் 9 புள்ளிகளையும் எடுத்தனர். இறுதி ஆட்டத்தில் பாஷையூர் வீரர்கள் வெற்றியீட்டினர்.

### சனசமூக நிலைய 20-வது ஆண்டுவிழா

உடுப்பிட்டி, புதன்

இளகாமம் மூத்த விநாயகர் சனசமூக நிலைய 20-வது ஆண்டுவிழாவும், விளையாட்டுப்போட்டிகளும் இம்மாதம் 15-ம் திகதி ஆரம்பமாகித்தொடர்ந்து மூன்று நாட்கள் வரை சரணவாய் மூத்த விநாயகர் ஆலய மேலைவீதியில் நடைபெறும். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

### பாகிஸ்தான் மறுப்பு

ராவல்பிண்டி, ஆக. 3

பாகிஸ்தானுக்கும் சீனாவுக்குமிடையே 'அணுக் கூட்டு' ஒப்பந்தமிருப்பதாக இந்தியா தெரிவித்திருந்த கருத்தைப் பாகிஸ்தான் வெளிநாட்டுமந்திரி மறுத்துள்ளார்.

### கரபந்தாட்டம்

சங்கானை, புதன்

இணுவில் சிறி முருகன் சனசமூக நிலையத்திற்கும் சண்டிலிப்பாய் வடக்கு சனசமூக நிலையத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப்போட்டியில் இணுவில் வெற்றிபெற்றது.

சண்டிலிப்பாய் வடக்குச் சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் இருஆட்டங்களிலும் இணுவில் சிறி முருகன் சனசமூகநிலையத்தினர் முறையே 14 — 6, 14 — 7 புள்ளிகள் பெற்று வெற்றியீட்டினர். கே. தங்கராசிவம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

விரும்பிய பெண்ணைக் கைப்பிடிக்க

## தந்தை மறுத்ததால் தனயன் தற்கொலை!

கிளிநொச்சி, புதன்

தான் விரும்பிய பெண்ணைக் கைப்பிடிக்க தந்தையார் மறுத்துவிட்டாரென்ற காரணத்தால் மனமுடைந்த வாலிபர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார். இந்தச் சம்பவம் பரந்தனிலுள்ள குமரபுரத்தில் நடந்துள்ளது.

இருபத்திரண்டு வயது வாலிபர் கந்தசாமி கனகசபையின் மரணவிசாரணையின்போதே மேற்கண்ட தகவல் தெரியவந்தது கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு மு. யோகலிங்கம் மரண விசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவரின் தந்தை பெரியண்ணன் கந்தசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"எனது மகன் புத்தளத்தில் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகக் கூறி அந்தப் பெண்ணைத் திருமணம் செய்யப்போவதாக என்னிடம் சொன்னார். அதற்கு அனுமதி தரும்படி கேட்டார். ஆனால் நான் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டேன். அவரது அண்ணன் சகோதரி இருவர் ஆகியோரின் திருமணம் முடிந்த பிறகு அந்தப் பெண்ணைத் திருமணம் செய்துகொள் என்று கூறினேன். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் செய்த வேலையைச் செய்யும்படியும் சொன்னேன்".

கிளிநொச்சிவைத்திய அதிகாரி டாக்டர் லூரிக் ரூசைப்பிள்ளை பிரேத பரிசோதனை நடத்தினார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### தீவுப்பகுதி பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

ஊர்காவற்றுறை, செவ்.

தீவுப்பகுதி வட்டாரபாடசாலைகளின் மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராக உதவி வித்தியாதிபதி திரு, டபிள்யு. டபிள்யு. வர்ணசூரியா கலந்து கொண்டார். தீவுப்பகுதி எம் பி- திரு. வி. நவரத்தினம் சிறப்புரை நிகழ்த்தினார், திருமதி வர்ணசூரியா பரிசில் வழங்கினார்.

வெற்றிபெற்ற பாடசாலைகள்: ஆண்கள் மேற்பிரிவு:- றோ. க. ஆண் பாடசாலை நெடுந்தீவு, மத்தியபிரிவு:- றோ. க. ஆண் பாடசாலை நெடுந்தீவு, கீழ்ப்பிரிவு:- றோ க. ஆண்பாடசாலை நெடுந்தீவு, மேற்பிரிவு பெண்கள் றோ க. பெண்பாடசாலை நெடுந்தீவு, மத்தியபிரிவு: றோ க. பெண்பாடசாலை நாரந்தனை, கீழ்ப்பிரிவு: ஸ்ரீ கணேசவித்தியாசாலை நயினாதீவு.

சமீகிதக்கதிரை: செல்வி எம். வயித்தியநாதன், செல்வி. மா தங்கம்மா.

### கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், வியா

நவாலி சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் நாளைமாலை குகஸ்ரீ குகானந்தவாரியார் 'சீதா கல்யாணப்படலம்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

### பேச்சுப்போட்டி

கொழும்பு, சனி

இலங்கை சட்டக்கல்லூரி தமிழ்மன்றத்தினர் நடாத்தும் பேச்சுப்போட்டி வரும் சனிக்கிழமை மாலை நடைபெறும்.

### 'எம்மதமும் சம்மதம்'

சங்கானை, புதன்

"அரசியலில் சமயத்தைப் புகுத்துவதால் அரசியலுக்கும் இலாபமில்லை; சமயத்திற்கும் இலாபமில்லை எம்மதமும் சம்மதம் என்ற ரீதியில் அக்பர் ஆணை செலுத்தியமையினால் முகலாயப்பேரரசு செழித்தோங்கியது இந்துக்களுக்கு மறுமலர்ச்சி அளித்த மாவீரன் சிவாஜியோ மாற்றான் மதத்தையும் மதித்தான். இந்த வரலாற்றுப் பாடத்தை நாம் மறக்கலாகாது மத உணர்ச்சியைக் கிளறி அரசியலிலே லாபம் அடையலாம் என எவர் எண்ணினாலும் நிச்சயம் தோல்வியே ஏற்படும்" என்று திரு. மு. சிவானந்தம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி வரலாற்றுக் கழகம் நடாத்திய மாவீரர் தினவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் க சண்முகலிங்கம், ஆசிரியர் ம. இருநீலகண்டசிவம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.





லக்ஷபான பாட்டரிகள்

இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.

ஏனெனில்:

* அவை, பூரண சக்தியுடன தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அளவு சக்தி இழப்பதில்லை.
* லக்ஷபானபாட்டரிகள், சர்வதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான. அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிரூபிக்கப் பட்டவை.
* லக்ஷபான பாட்டரிகள் இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட மிக மலிவானவை.

எவரெடி ஈஸ்டர்ன் கார்ப்பரேஷன் லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மாநகரசபை மாஜி அங்கத்தினர்

# பிரதமரைச் சந்தித்துப்பேச அவகாசம் கேட்டுள்ளனர்

யாழ்ப்பாணம், வியா. கலைக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகரசபையின் அங்கத்தவர்கள், யாழ்ப்பாணத்துக்கு இம்மாதம் 9-ந் திகதி வரும் பிரதமமந்திரியைச் சந்தித்துப் பேசுவதற்கு முயற்சி செய்து வருவதாகவும், பிரதமரைச் சந்திப்பதற்கு தங்களுக்கு ஓர் அவகாசம் தரவேண்டுமென அவர்கள் கோரியிருப்பதாகவும் தெரிகிறது.

யாழ்ப்பாணம் மாநகரசபை கலைக்கப்பட்டதற்கு வேறுபல காரணங்கள்இருப்பதாகத் தெரிவிக்கும் மகஜர் ஒன்றையும் இந்த அங்கத்தவர்களில் சிலர் தயாரித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

பிரதமரை யாழ்ப்பாணத்துக்கு வருமாறு மாநகரசபை அழைத்திருந்ததுடன் அவர்கள்இங்கு வரும்போது உற்சாகமான வரவேற்பு அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால்பிரதமர் வருவதற்கான திகதி நிர்ணயிக்கப்படுமுன் மாநகரசபை கலைக்கப்பட்டுவிட்டது.

பிரதமருடன் அரைமணி நேரம் பேசுவதற்கு அவர்கள் அனுமதி கேட்டுள்ளனர்.

# பகைநாகர்,மீஸோ கலககாரர் வசம் பிரெஞ்சு ஆயுதங்கள்

## தூதரிடம் இந்தியா புகார்

புதுடில்லி, ஆகஸ்ட் 3 கிழக்குப் பாகிஸ்தான் நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் பகை நாகர்களையும் மீஸோ சட்டவிரோதிகளையும் தடுத்துநிறுத்துவதில் அரசாங்கம்தீவிர கவனம் செலுத்தி வருகிறது என்று இந்திய பாதுகாப்பு மந்திரி திரு.வை.பி சவான் இன்று லோக சபையில் தெரிவித்தார்.

அங்கத்தவர் ஒருவரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில்தான் திரு. சவான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"பகை நாகர்களினதும் மீஸோ சட்டவிரோதிகளினதும் நடமாட்டங்கள்நன்கு கவனிக்கப்பட்டு வருகின்றன. கிழக்குப்பாகிஸ்தான் செல்லும் அவர்களை வழிமறிக்கும் முயற்சிகள்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது சுமார் 350 பேர்கொண்ட கோஷ்டியொன்று கிழக்குப் பாகிஸ்தான் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது" என்றும் திரு.சவான் கூறினார்.

"கிழக்குப்பாகிஸ்தானுக்கு ஏற்கெனவே இப்படியான பல கோஷ்டிகள் சென்றுவிட்டன. அவர்களுக்கு அங்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவர்களை இந்தியத் துருப்புக்கள் தடுத்தபொழுது ஏராளமான பிரான்ஸ் ராக்கெட்டுகளும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன. இந்த ஆயுதங்கள் இந்தியாவிலுள்ள பிரெஞ்சு தூதரிடம் காட்டப்பட்டு புகாரும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது" என்றும் அவர் கூறினார்.

# உலக வங்கியின் மற்றுமொரு தூதுகோஷ்டி இலங்கைவருகிறது

கொழும்பு, செவ். இலங்கையின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு மேலும் உதவியளிக்கும் வகையில் உலக வங்கியின் மற்றும் ஒரு தூதுகோஷ்டி விரைவில் இங்கு விஜயஞ்செய்யவிருக்கிறது.

தற்பொழுது அமுலிலிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னேற்றுவதிலும் மேலும் அபிவிருத்தித் திட்டங்களை இங்கு ஏற்படுத்துவது குறித்து ஆராய்ந்தறிவதிலும் இத்தூதுகோஷ்டியினர் கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவியளிப்பதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கையின் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உலக வங்கி நிதி வசதியளிக்கும் பட்சத்தில், நாடு பலதுறைகளிலும் முன்னேற்றமடைய வாய்ப்பிருக்குமெனக் கருதப்படுகிறது.

உலக வங்கி ஆலோசகர் ஒருவரின் சிபார்சின் பேரிலேயே பல அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ள அரசாங்கம் நோக்கம்கொண்டிருக்கிறது.

# மனைவிமீது வைத்த அன்பு கணவன் உயிரைக் காத்தது

சிட்னி, ஆக. 3 மேற்கு அவுஸ்திரேலியாவில்உள்ள டாம்பியர் என்னுமிடத்திலுள்ள 22 வயது நிறைந்த இளைஞனை செஸில் புருனிங் என்பவன் பயங்கரவிபத்தில் சிக்கிக்கொண்டான்.

ரயில்வே லொறியொன்றின்கீழ் அகப்பட்ட அவனது கால்கள் இரண்டும் துண்டிக்கப்பட்டன. விபத்து நடக்கும்பொழுது கும்மிருட்டு, இவன் கீழே விழுந்து கிடந்ததை யாருமே கவனிக்கவில்லை. யாருமே கவனிக்க முடியாத தனிமையான ரயில்தண்டவாளப் பாதைக்கருகேதான் அவன் கிடந்தான்.

கால்கள் இரண்டிலுமிருந்து இரத்தம் பாய்ந்தோடியது அப்பொழுது அவன் சுவர்க்கத்திலிருந்து நரகம் வரைஉள்ள அனைவரையும் திட்டுதிட்டென்று திட்டினான்.

பிறகுஅவன்தனது 17வயது மனைவியை நினைத்தான். "நான் இறக்கப்போவதில்லை" என்று தீர்மானித்தான். தனது இடுப்பிலிருந்த பெல்டை அவிழ்த்து வலது முழங்காலைச் சுற்றி இறுகக்கட்டினான். கையிலிருந்த டோர்ச்சின் வெளிச்சத்தை அடித்தபடி 100 யார்வரை தன்னை இழுத்துக்கொண்டு தண்டவாளத்துக்கருகே சென்றான்.

அவ்வழியே வந்த ரயில் ஒன்று அவனைக் கண்டது. அவன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டான்.

இப்பொழுது சுகமடைந்துவரும் அவ்விளைஞன், பெல்டினால் வலது முழங்காலைக் கட்டியிருக்காவிடில் அதிக இரத்தத்தைஇழந்துஉயிரையும்இழந்திருப்பானென்று அவனது டாக்டர்கள் கூறுகின்றனர்.

மனைவியின் மீது அவன் வைத்திருந்த அன்பு அவன் உயிரைக்காப்பாற்றும்வகையில் அவனுக்குத் துணையும் ...

# துறைமுகக்கூட்டுதாபன தலைவர் ராஜினுமா செய்தார்

கொழும்பு, புதன் துறைமுகக்கூட்டுத்தாபன தலைவர் திரு. எம். சந்திரசோமா தமது பதவியை ராஜினுமாச் செய்துள்ளார் ஆகஸ்ட் முதல் திகதியிலிருந்து தம்மைப் பதவியிலிருந்து விடுவிக்கும்படி கேட்டுள்ளார்.

அடுத்த வாரம் மந்திரிசபை கூடும்போது இவருடையராஜினமாவை வாபஸ்பெறும்படி கோரச்செய்வது பற்றி ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பொலிஸ் அதிபர் மறுப்பு

கொழும்பு, புதன் சதிமுயற்சி சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளையும் துப்பறியும் பொலிசைச் சேர்ந்த ஏ. எஸ். பி.டைரல் குணத்திலக்கா இனிமேல் மேற்கொள்வாரென்ற கருத்துப்பட சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மறுத்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ஏற்கனவே இந்த வழக்குச் சம்பந்தமான புலன் விசாரணைக்குப் பொறுப்பாக விருந்துவரும் பொலிஸ் சுப்ரண்டெண்ட் (விசேஷபிரிவு) தொடர்ந்தும் அதேபொறுப்பில்இருந்துவருவாரென்றும் திரு குணதிலகா அவருக்கு உதவியாகவேநியமிக்கப்பட்டுள்ளாரென்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ளார்

## இளம் பெண்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதுகூட அவருக்குத் தெரியாதென்றும் கூறினார். கமலாவதியைத் தேடுவதற்குக் கூடப் பொலிசார் எந்தவித முயற்சியும் செய்ததில்லை ஆனால் பொலிசாருக்கெதிராக அவர் புகார் செய்தவுடன் அவரைக் கைதுசெய்து அவருக்கெதிராக வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்' என்று வழக்கறிஞர் கூறினார்.

கமலாவதியை 300ரூபாய் பிணையில் செல்ல அனுமதியளித்த நீதிபதி மேல் விசாரணையை வேறொரு திகதிக்கு ஒத்திவைத்தார்.

## ஜனத்தொகை அதிகரிப்பு

கொழும்பு, புதன் இலங்கையின் ஜனத்தொகை 1963-64-ம் ஆண்டில் 3,61,419 ஆக அதிகரித்துள்ளது. இவ் வருடத்காலத்தில் இறந்தவர் தொகை 95,397 ஆகும்.

பல்கலைக்கழகத்தில்

# பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு கடனுதவி வழங்கப்படுமா?

## கல்விமந்திரியிடம் டாக்டர் என். எம். கேட்பார்

கொழும்பு, வியாழன் பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பட்டதாரப் பயிற்சி பெறுகின்ற ஆசிரியர்களுக்கு இறுதி வருடத்தில் படிப்பதற்கு உதவியாக அரசாங்கம் கடன் உதவி வழங்குவது பற்றி நாளை பார்லிமெண்ட் கூடும் போது கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையிடம் டாக்டர் என். எம் பெரேரா கேள்விகள் கேட்க இருக்கிறார்.

டாக்டர் பெரேரா கல்வி மந்திரியிடம் கேட்கவிக்கும் கேள்விகள் வருமாறு:

இரண்டு வருடங்களுக்கு முழுச் சம்பளத்துடனும், ஒரு வருடத்திற்கு சம்பளமில்லாமலும் படிப்பு விடுமுறை வழங்கப்பட்ட அநேக ஆசிரியர்கள் பேராதனையில் உள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரிப் பயிற்சி பெறுகின்றன என்பதை அவர் அறிவாரா?

இம்மாணவர்களில் அதிகமானோர் எதுவித நிதிஉதவிகளுமின்றி மூன்றாவது வருடத்தைச் சமாளிப்பதற்கு மிகுந்த கஷ்டப்படுவதை முன்னிட்டு, கல்வித்திணைக்களத்தின் கீழ் அவர்கள் மீண்டும் கடமையாற்றத் தொடங்கியதன் பின்னர் இலகுவான தவணைப்பணங்களாக அவர்களுடமிருந்து அறவிடக்கூடிய வகையில் அவர்களது மூன்றாவது வருடப்பயிற்சிக் காலத்தில் அவர்களிக்குச் சம்பள முற்பணம் வழங்குவது பற்றி அவர் ஆலோசிப்பாரா?

அல்லது அதற்குப்பதிலாக கடன்வகையில் வங்கிக்குச் சேரவேண்டிய பணம்சம்பந்தப்பட்ட வங்கிச்கித்திணைக்களத்தால் நேரடியாகவே அனுப்பப்படுமென்ற கல்வித்திணைக்கழ உத்தரவாதத்தின் பேரில்மேலே குறிப்பிடப்பட்டதுபோன்று திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் நீண்டகாலக்கடன்களை அவர்களுக்கு வழங்குமாறு இலங்கைவங்கிக்கோ அல்லதுமக்கள்வங்கிக்கோ அவர் சிபார்சுசெய்வாரா?

## வருமான வரி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போகும்போது எனது எல்லாவித வருமானவரிகளையும் செலுத்தியிருந்தேன். நான் வெளிநாட்டில் இருந்தபோது, புதிதாக கணக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. 1963 அக்டோபரில் எனது வீடு முற்றுகையிடப் பட்டு சோதிக்கப்பட்டுள்ளது. 2 டயறிகள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. இலங்கை வங்கியில் இருந்த எனது கணக்குகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. அதன்பின் நான் வருமானவரி பகுதியினரால் கடுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டேன். வருமானவரி பகுதியைச் சேர்ந்த மித்திரசேன என்னை எப்போதும் மாட்டி விடுவதற்கு குறிபார்த்துக்கொண்டிருந்தார். விசாரணை செய்வதற்குப் பதில் என்னை அலைக்கழித்தார்கள். அந்தசமயத்தில் எனது சொத்துகளின் பெறுமதி மூன்றரை லட்சம் ரூபாய். பம்பலப்பிட்டியில் எனக்கொரு வீடு உண்டு. சிலாபத்தில் 71 ஏக்கர் தென்னங்காணி உண்டு இவைகளை 6 லட்சம் ரூபாவுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. எனது சொத்துகள், வீடு எல்லாவற்றையும் விற்றாலும் இந்தத் தொகையாக முடியாது.

இந்தக் கட்டத்தில் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## பொலிஸ் இலாகா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களை நன்கு அறிந்தவராக இருப்பதால் புகார் எந்தப் பலனும் அளிக்காமல் போய்விடும் என்று அவர் கூறினார்.

பொலிசாருக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் புகார்களை விசாரிக்க ஒரு சபை இருக்கவேண்டுமென்றும் அதில் பொலிசாருடன் இருவர் பொதுமக்களாய் இருக்கவேண்டுமென்றும் அவர் ஆலோசனை தெரிவித்தார்

தெஹிவளை பொலிஸ் பகுதியைப்பற்றி மேஜர் குணரத்ன குறிப்பிடுகையில் சமீபகாலத்தில் தெஹிவளை பொலிஸ் கடும் குற்றச்சாட்டுகளுக்குள்ளாகியிருக்கின்றது என்றார். சமீபத்தில் பொய் சாட்சியம் சோடித்ததாக தொடரப்பட்ட வழக்கொன்றில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரெஜி அமரசேகர என்பவர் சம்பந்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்,

தெஹிவளைப் பகுதி கசிப்புக்காரர்களின் ராஜ்யமாக விளங்குகின்றது. இதுபற்றி பொலிசில் செய்யப்படும் புகார்கள் சம்பந்தமாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

தெஹிவளைப் பகுதி படுமோசமானநிலையில் இருக்கின்றது. அங்கு எறிகுண்டுகள் டென்னிஸ் பந்துகள் மாதிரி வீசி விளையாடப்படுகின்றன என்று மேஜர் குணரத்ன தெரிவித்தார்.

## பாஸ்கெட் பந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், வியா: இன்று இரவு 7-30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டுமைதானத்தில் மின்வெளிச்சத்தில் சென் ஜோன்ஸ்கல்லூரி கோஷ்டிக்கும் (சிரேஷ்ட சாம்பியன்ஸ்), யாழ்ப்பாணம் பிரசிடென்ட்ஸ் கோஷ்டிக்குமிடையிலான பாஸ்கெட் பந்தாட்ட இறுதிப்போட்டி நடைபெறவிருக்கிறது.

இன்று நடைபெறும் இரண்டாவது போட்டியில் கோப்பாய் விளையாட்டுக்கழக கோஷ்டியினரும், யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி பழைய மாணவர் கோஷ்டியினரும் மோதவிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் மாவட்ட மாஜிஸ்திரேட் திரு. டி. ஜே ராஜரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார் திருமதி ராஜரத்தினம் வெற்றிபெறுபவர்களுக்கு பரிசில்களை வழங்குவார்

விற்பனைக்கு

வீடுவளவு

சுன்னாகம் கே. கே. எஸ். றோட் மார்க்கட்டுக்கு முன்பாக மூன்று வீடுகளும் அதுடன் சேர்ந்த பன்னிரண்டு (12) பரப்புக் காணியும்பிரித்தும் கொடுக்கலாம். விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

C/o ஈழநாடு. 817

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org